யாழ் தினக்குரல் THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com
ஓசை : 020 குரல் : 267 திங்கட்கிழமை 06 டிசம்பர் Monday 06th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12

## கொரோனாவால் 21 பேர் மரணம்

நாட்டில் மேலும் 21 பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்த தாக சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் நேற்று அறிவித் தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த மரணங்கள் உறுதிப்படுத்

பக்கம் 02

## முடக்க நிலை மீண்டும் வருமா?

கொவிட்-19 இன் ஆபத்தான ஒமிக்ரான் மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரி வித்துள்ளார். கண்டியில் நேற்று

பக்கம் 02

# கொவிட் தடுப்பு நடவடிக்கையில் அரசாங்கம் பெரும் அலட்சியம்

**-தடுப்பூசி பெறாது வெளிநாடு சென்று திரும்பிய பெண்ணுக்கே ஒமிக்ரான் தொற்று**
**-எவ்வாறு வெளிநாடு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்? என பெரும் சர்ச்சை**



க.பிரசன்னா

தென்னாபிரிக்காவில் அடை யாளம் காணப்பட்ட ஒமிக்ரான் கொவிட் திரிபுடன் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது டைய பெண் எவ்வித கொவிட் தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண் டிருக்காத நிலையில் எவ்வாறு வெளிநாட்டுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்? என்பது தொடர்பில் தற்போது சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இந்த விடயத்தில் விமான நிலைய அதிகாரிகள் மற்றும் சுகாதார அதிகாரிகள் பொறுப்பற் றவர்களாக செயற்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் அந்தப் பெண் நாட் டிற்கு வருவதற்கு பயன்படுத்திய முறை தொடர்பில் எவ்வித பிரச்சி னையும் இல்லை என பிரதி சுகா தார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரி வித்துள்ளார்.

முழுமையாக தடுப்பூசி போடப் பட்ட அனைவரும் தங்கள் சொந்த நாட்டிலிருந்து புறப்படும்போது தடுப்பூசி சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறானதொரு பின்னணியில் இந்தப் பெண் எவ்வாறு நாட்டை

பக்கம் 02

## ஒமிக்ரானுடன் வந்தவரை நாட்டுக்குள் அனுமதித்தது யார்?

**-அரசவைத்திய அதிகாரிகள் சங்கம் கேள்வி-**

க.பிரசன்னா

ஒமிக்ரான் கொவிட் திரிபு டன் அடையாளம் காணப்பட்ட இலங்கை பெண், தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளாத நிலையில் நாட் டுக்குள் நுழைந்துள்ளமை குறித்து கொவிட் தடுப்பு செயலணியிடம் முறைப்பாட்டினை பதிவுசெய்ய வுள்ளதாக அரச வைத்திய அதிகாரி கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பி னர் பிரசாத் கொலம்பகே தெரிவித் துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் கொவிட் தடுப்பூசி திட்டத்தின் கீழ் முழுமையாக தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட பயணிகளை

பக்கம் 02

## மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு மக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்

**-யாழில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா-**



மாகாணசபைத் தேர்தலை நடத் துவதற்கு தமது அரசியல் பிரதிநிதி களிடம் பொதுமக்கள் வலியுறுத்த வேண்டும். அவர்கள் மூலமே நாடா ளுமன்றத் தெரிவுக்குழு முடிவுகளை மேற்கொண்டு தேர்தலை விரை வாக நடத்த முடியுமென தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.


யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையா டலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எமது நிலைப் பாடு. மாகாணசபைக

பக்கம் 02

## கிளிநொச்சியில் குண்டு வெடிப்பு இளைஞர் பலி; சகோதரர் காயம்

**-பழைய ஷெல்லை வெட்டிய போது விபரீதம்-**



கிளிநொச்சி - பரந்தன் உமையாள்புரம் சோலை நகர் பகுதியில் வீடொன் றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இளைஞா் பலியானதுடன், அவ ரது சகோதரான சிறுவன் படுகாயமடைந்தார்.

பழைய குண்டு ஒன்றை வெட்டி அதற்குள்ளிருந்த வெடிமருந்தை எடுக்க முயன்றபோதே அது வெடித்ததாக தெரியவரு கிறது.

நேற்று பிற்பகல் 3-30 மணியள

பக்கம் 02

## முல்லைத்தீவு கடலில் மூழ்கி இளைஞன் பலி; இருவர் மாயம்



முல்லைத்தீவு கடலில் குளித்த மூன்று இளை ஞர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலை யில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். இவருடன் குளித்த மற்ற இரு இளை ஞர்கள் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ள நிலையில் அவா்களை தேடும் பணி இரவிரவாக இடம்பெற்றது. முல்லைத் தீவு சுற்றுலா கடற்கரை யில் நேற்று மாலை இந்த சம்பவம் இடம்பெற்றது.

வவுனியாவில் இருந்து வாகனத்தில் வருகைதந்த பெண் ஒருவர் உள்ளிட்ட நான்கு

பக்கம் 02

## தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தவில்லை

**-கிளிநொச்சியில் சம்பிக்க ரணவக்க-**



தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு மக்கள் சக்தியுடன் எந்தவித பேச்சுவார்த் தையிலும் ஈடுபடவில்லை எனவும், பிரதேசவாதம் சாராது அனைத்து மக்க ளின் நலன்சார்ந்தே அனை வரும் செயற்படுகின்றோம் என பாட்டலி சம்பிக்க ரண வக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஊடகவி யலாளர் சந்திப்பின்போது வினவப்பட்ட கேள்விக்கு பதிலளிக்

பக்கம் 02

## யாழ். புதிய பேருந்து நிலையத்திற்கு வர இ.போ.ச.வினர் தொடர்ந்து மறுப்பு

**-ஆளுநர் நேற்று அழைத்து பேசியும் பயனில்லை-**



யாழ்.நகரில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய நெடுந்தூர பேருந்து நிலையத்திற்கு தாம் ஒருபோதும் வர மாட்டோமென இலங்கை போக்குவரத்து சபை தொடர்ந்து விடாப்பிடியாக இருந்து வருகிறது.

இந்த விவகாரம் தொடர்பில் இ.போ.ச. பிரதிநிதிகளை ஆளுநர் நேற்று அழைத்துப் பேசினார். இச்சந் திப்பில் யாழ். மாநாகர சபை முதல் வா் விஸ்வலிங்கம் மணிவண்ண னும் பங்கேற்றிருந்தார்.

எனினும் இ.போ.சவினர் விடாப்பி டியாக நின்ற காரணத்தால் கூட்டம் எந்தவித முடிவுமின்றி

பக்கம் 02

## அமைதியான அதிகார மாற்றத்தை விரும்புகிறோம்

**-பைடனுக்கான தமிழர்கள் அழைப்பு-**




பொருளாதாரத்தால் கஷ்டப் படும் இலங்கையில் இருந்து தமிழர்களின் தாயகமான வடக்கு-கிழக்கை எடுத்து, தற்போது வடக்கு- கிழக்கில் வாழும் தமிழர்கள் மற்றும் பிற இன மக்களின் அனைத்து

பக்கம் 02

## மத அடிப்படைவாதம், பயங்கரவாதத்தை ஒழிக்காவிட்டால் அனைவருக்கும் ஆபத்து

**-இந்து சமுத்திர மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு-**



தற்போது பாரிய அச்சு றுத்தலாக மாறியுள்ள மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதச் செயற்பா டுகளை முறியடிப்பதற்கு இந்து சமுத்திர நாடுக ளின் ஒருங்கிணைப்பு தேவைப்படுகின்றது .இதனை மிகக் கவனமா கக் கண்காணித்து இல் லாதொழிக்கவில்லையா யின், அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் போன்றன சுலபமாக இன்னுமோர் இனத்தை நோக்கிச் செல்ல வாய்ப் புள்ளது என்று ஜனாதிபதி கோத்த

பக்கம் 02

## இன்றும் நாளையும் சில பகுதிகளில் மின் தடை

**புதன்கிழமை முதல் வழமைக்குத் திரும்பும்**

பக்கம் 02




## முல்லைத்தீவு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரில் மூன்று இளைஞர்கள் கடலில் குளித்துள்ளனர். இதன்போது மூவரும் மூழ்கிக்கொண்டு செல்வதை அவதானித்த அவர்களுடன் சென்ற யுவதி அருகில் இருந்தவர்களை உதவுமாறு கோரியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து கடற்கரையில் கூடிய மக்கள் கடலில் மூழ்கியவர்களை தேடினர். தேடுதலில் வவுனியா - மதகுவைத்தகுளத்தைச் சோ்ந்த 27 அகவையுடைய மனோகரன் தனுசன் என்பவர் சடலமாக மீட்கப்பட்டார்.

வவுனியா - தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 26 அகவையுடைய விஜயகுமாரன் தர்சன், வவுனியா - மதவுவைச்சகுளத்தினை சேர்ந்த 26 சிவலிங்கம் சகிலன் ஆகியோரே கடலில் மூழ்கி காணாமல் போனவர்களாவர்.(ச-15)

## கிளிநொச்சியில் குண்டு .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிவலிங்கம் யுவராஜ் வயது- 25 என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது சகோதரரான 13 வயதான சிவலிங்கம் நிலக்சன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

வெடிப்பு சம்பவம் இடம்பெற்ற வீட்டை சூழவுள்ள வீட்டின் சில பகுதிகளிலும் ஆபத்தான வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது(ச-55,52)

## முடக்கநிலை .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

புதிய மாறுபாடு குறித்து நிபுணர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். முழுமையான பகுப்பாய்வுக்குப் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அவர்கள் அறிவிப்பார்கள்.

முடக்க நிலைக்கு செல்லாதிருக்க மக்கள் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் இராணுவத் தளபதி வலியுறுத்தினார்.

## மத அடிப்படைவாதம் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாய ராஜபக்ச தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்ட இந்து சமுத்திர மாநாட்டின் ஆரம்ப உரையை நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச மேலும் பேசுகையில்,

இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு தற்போது பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ள மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கும், இவ்வாறான ஒருங்கிணைப்பே தேவைப்படுகின்றது. இவை தொடர்பில் மிகக் கவனமாகக் கண்காணித்து இல்லாதொழிக்கவில்லையாயின், அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் போன்றன சுலபமாக இன்னுமோர் இனத்தை நோக்கிச் செல்ல வாய்ப்புள்ளது.

2019ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான இலங்கையின் அனுபவம் சுட்டிக்காட்டியபடி இந்தப் பிரச்சினையும் எந்த ஒரு குறிப்பிட்ட பகுதிக்கும் மட்டுப்படுத்த முடியாது என்பதைக் காட்டுகிறது. கவனமாகக் கண்காணித்து தடுக்கப்படாவிட்டால், தீவிரவாத மற்றும் பயங்கரவாதச் கருத்தியல்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எளிதில் பரவலாம். புலனாய்வுத்துறை பரிமாற்றம் மற்றும் பிற அரசுகளுக்கிடையேயான நடவடிக்கைகள் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும். இதை நான் கடுமையாக வலியுறுத்துகிறேன் என்றார்.

## யாழ்.புதிய பேருந்து .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவுக்கு வந்ததாக யாழ் மாநகர முதல்வர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கான பேருந்து நிலையம் ஒன்று இ.போ.ச மத்திய பேருந்து நிலையத்திற்கு அண்மையாக புதிதாக அமைக்கப்பட்டது. யாழ். நகர மத்தியில் உள்ள பேருந்து நிலையத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை தீர்க்கும் வகையில் பல மில்லியன் செலவில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது.

எனினும் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தாம் சேவையில் ஈடுபட மாட்டோம் என இலங்கை போக்குவரத்து சபை மறுத்து வருகிறது. இந்நிலையில் இ.போ.ச அங்கிருந்து சேவையில் ஈடுபட்டால் மாத்திரமே நாமும் அங்கிருந்து சேவையில் ஈடுபடுவோம் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. அதனால் புதிய நெடுந்தூர பேருந்து நிலையம் பயன்பாடு இல்லாமல் காணப்படுகிறது.

இந்நிலையில் இந்தப் பிரச்சினை தொடர்பாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று காலை கூட்டமொன்று இடம்பெற்றது. இதிலும் இ.போ.சவினர் விடாப்பிடியாக நின்றனர். இ.போ.வினர் எதற்கும் மசியாத நிலையில் அனைவரும் ஆலோசித்து நல்ல முடிவைச் சொல்லுமாறு கேட்டுக்கொண்ட ஆளுநர் இடைநடுவிலேயே கூட்டத்தில் இருந்து எழுந்து சென்றுவிட்டார். மாநகர முதல்வரும் ஒரு கட்டத்தில் வெளியேறிச் செல்லும் முடிவைச் சொல்லுமாறு கேட்டுக்கொண்டார். தொடர்ந்து ஆலோசனை நடத்திய இ.போ.சவினர் புதிய பேருந்து நிலையத்துக்கு செல்ல முடியாது என்ற தங்கள் முடிவை அறிவித்தனர். இந்தக் கலந்துரையாடலில் ஆளுநர், யாழ்.மாநகர சபை முதல்வர் மணிவண்ணன், யாழ். மாநகர ஆணையாளர், நகர அபிவிருத்தி சபை, இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் போன்றவர்கள் பங்கேற்றிருந்தனர். (ச-40)

## மாகாண சபைத் தேர்தலை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கான செலவீனங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றது. அது அதிகாரிகளினால் நிர்வகிக்கப்படுகின்றது. அங்கு ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மாத்திரமே இல்லை. ஆனால் அவர்கள் இருக்க வேண்டும் என்பது தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடு.

பழைய முறையிலோ புதிய முறையில் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என நாம் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம்.

பொதுமக்கள் தேர்தலை நடத்துவதற்கு மக்கள் பிரதிநிதிகளிடம் வலியுறுத்த வேண்டும். அவர்கள் மூலமே நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவுகளை மேற்கொண்டு தேர்தலை விரைவாக நடத்த முடியும் எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் நாம் 40 யோசனைகளை முன் வைத்துள்ளோம்.

அவற்றில் சிறைச்சாலைகளில் விசேட வாக்களிப்பு முறை, அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோருக்கு முற்கூட்டிய வாக்களிப்பு முறை, செயற்படாத மக்கள் பிரதிநிதிகளை மீள அழைத்தல், உள்ளூராட்சி மன்றத் காலப்பகுதியை நீடிக்கும் அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவிடம் வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் வயோதிபர்களுக்கு வீடுகளில் வைத்தே வாக்குகளை செலுத்தும் ஏற்பாடு, இளைஞர்களுக்கு கட்டாய கோட்டா முறை,தேர்தல் பிரசார செலவீன ஒதுக்கீடு தொடர்பில் கட்டுப்பாடு, வேட்புமனுவில் ஏற்படும் நுட்பத்தவறுகளை கருத்தில் கொள்ளாமல் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பமளித்தல், தேர்தல் பிணக்குகளை தீர்க்க தேர்தல் நியாய சபையை உருவாக்குதல் போன்ற காணப்படுகின்றன.

பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகள் ஊடாக தங்களது யோசனைகளை நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் முன்வைக்க முடியும் எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். (ச-40,75)

## கொவிட் தடுப்பு .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு வெளியேறினார் என்பதில் சர்ச்சைகள் நிலவுகின்றன.

முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் தற்போதைய சுற்றாடல் அமைச்சின் செயலளார் அனில் ஜயசிங்கவுக்கு தடுப்பூசி அட்டை கொண்டுவரத் தவறியமையால் அவருக்கு விமான நிலையத்தில் அனுமதி மறுக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. எனினும் தடுப்பூசி அட்டை இல்லாத நிலையில் இந்தப் பெண் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

தடுப்பூசி அட்டையினை வைத்திருப்பதை சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தியிருக்கும் நாடுகளுக்கு செல்பவர்களுக்கு விமான நிலையத்தில் அவை தொடர்பில் பரிசீலனை மேற்கொள்ளப்படும். ஆனால் இந்தப் பெண் சென்ற நாட்டில் அவ்வாறான நடைமுறைகள் இல்லையாயின் தடுப்பூசி அட்டைகளுக்கான தேவை இருக்காது எனவும் பிரதி சுகாதார சேவைகள் பணிபாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

# இன்றும் நாளையும் சில பகுதிகளில் மின் தடை

### புதன்கிழமை முதல் வழமைக்குத் திரும்பும்-

நாட்டில் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய் கிழமையும் நாட்டின் சில பகுதிகளில் மின் தடை ஏற்படக் கூடிய வாய்ப்பிருப்பதாக எதிர்வுகூறப்பட்டுள்ளது.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மின்துண்டிப்பு தொடர்பான புதிய அறிவித்தல் நேற்று மாலை வெளியிடப்பட்டது

இதன்படி, நாட்டில் எந்தவொரு பகுதிக்கும் நேற்றைய தினம் மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர்.ரணதுங்க தெரிவித்திருந்தார் .

இதேவேளை, இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க் கிழமையும் நாட்டின் சில பகுதிகளில் மின் தடை ஏற்படக் கூடிய வாய்ப்பிருப்பதாகவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

எனினும், எதிர்வரும் புதன்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் மின்சார விநியோகம் வழமையான முறையில் இடம்பெறும் எனவும் இலங்கை மின்சார சபையினால் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்திற்கான கேள்வி குறைவடைந்துள்ளமையால், நேற்று மின் விநியோகம் துண்டிக்கப்படமாட்டாதென மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார்.

மாலை 6 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரையான காலப்பகுதிக்குள் நாட்டின் சில பகுதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக மின்சக்தி அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகள் முழுமையாக வழமைக்கு திரும்பும் வரை சில பகுதிகளில் ஒரு மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன குறிப்பிட்டார்.

## கொரோனாவால் 21 பேர் மரணம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,461 ஆக அதிகரித்துள்ளது.

## அமைதியான .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவைகளுக்கும் ஆதரவளிக்கும் நிர்வாகத்தை நிறுவ விரும்பும் புலம்பெயர் தமிழர்கள் குழுவுடன் பைடனுக்கான தமிழர்கள் பேசி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

வடக்கு-கிழக்கு பகுதியில் உள்ள தமிழர்கள் மருந்து, கோவிட் தடுப்பூசி, உணவு, உடை, எரிவாயு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் இன்றி தவித்து வருகின்றனர். வேலையும், பணமும் தட்டுப்பாடாக உள்ளது.

இலங்கை தன்னால் கையாள முடியாத கடுமையான நிதி நெருக்கடிகளை சந்தித்து வருவதால், அந்நாடு அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகங்களில் செய்தது போல், சீனாவிடம் இருந்து அதிக நிதியை கடன் வாங்கி, தமிழர்களின் நிலங்களை பணத்திற்காக வர்த்தகம் செய்ய வாய்ப்புள்ளது.

புதிய புலம்பெயர் தமிழ் அரசாங்கம் வடக்கு கிழக்கில் மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் நிறைவேற்றும் மற்றும் தற்போதைய அரசாங்கம் வழங்காத நலன்புரி நிதிகள், ஓய்வூதியம், பண உதவி, சுகாதார காப்பீடு, உணவு உதவி, வீடு, எரிசக்தி மற்றும் பயன்பாட்டு மானியங்கள் உட்பட. அத்துடன் கல்வி மற்றும் குழந்தை பராமரிப்பு உதவி.

எனவே, தற்போதைய அரசாங்கம் தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்தையும் ஒப்படைத்து, இந்த ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் இருந்து தனது ஆயுதப்படைகள், பொருட்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களை அகற்ற வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் அமைதியான அதிகார மாற்றத்தை விரும்புகிறோம். அவர்கள் வெளியேறினால், அடுத்த நாள் புதிய தமிழ் அரசை நிறுவ நாங்கள் தயாராக இருப்போம். தமிழர் தாயகத்தில் எந்தப் பொருளாதார வளர்ச்சியும் தேவையில்லாமல் 5 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர் தாயகத்தை நடத்துவதற்கு புலம்பெயர் தமிழர்களிடம் போதுமான நிதி உள்ளது. வடகிழக்கில், பொருளாதாரம் சுமார் ஒரு பில்லியன் டாலர் வருவாயை உருவாக்க முடியும், அதே நேரத்தில் எங்கள் பொருளாதார முன்னறிவிப்பின்படி செலவுகள் 1.5 பில்லியன் டாலர்கள் வரை உயரக் கூடும். எனவே தமிழர்கள் கூடுதலாக 500 மில்லியன் டாலர்களை முதலீடு செய்ய வேண்டும் அல்லது அதற்கு சமமான வளர்ச்சியைப் பார்க்க வேண்டும். இந்தோனேசியா பொருளாதார சிக்கல்களை எதிர்கொண்டபோது, கிழக்கு திமோரை அமைதியான முறையில் நாட்டிலிருந்து பிரிந்து செல்ல அனுமதித்தது. அதே நடைமுறையைத் தான் இங்கு இலங்கையிலும் துன்பப்படும் தமிழர்கள் சார்பாகக் கேட்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்க் கூட்டமைப்புடன் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர்

மேலும் தெரிவிக்கையில்,

இந்த பிரதேசம் யுத்த காலத்திலும், அதற்கு பின்னரான காலத்திலும் மிகவும் பாதிக்கப்பட்டு துன்பங்களை அனுபவித்த பிரதேசமாக இருக்கின்றது.

10 ஆண்டுகளிற்கு பின்னரும் இவர்களின் பிரச்சினைகளிற்கு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு இருக்கின்றது. கோவிட் நிலை காரணமாக மிகவும் இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மிகவும் பாதிக்கப்பட்டுள்ள இவ்வாறான பிரதேசங்களை அடையாளம் கண்டு அவர்களிற்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டி உள்ளது.

இனம், மதம், சமயம் என்ற பிரச்சினைகளிற்கு அப்பால், அனைத்து இலங்கை மக்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக சொல்லபோனால் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளிற்கு நாட்டு மக்கள் முகம் கொடுக்கின்றனர்.

இந்த நேரத்தில் அனைத்து மக்களும் ஒன்றாக வேண்டும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றாக செயற்பட வேண்டும். நாடாளுமன்றத்தை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர் என்பதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் இதுவரை தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித பேச்சுகளும் இடம்பெறவில்லை. பிரதேசவாதங்களை களைந்து அனைத்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் ஒன்றாக செயற்படுகின்றோம் எனவும் இதன்போது தெரிவித்துள்ளார். (ச-55)

## ஓமிக்ரானுடன் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட விமானங்கள் மட்டுமே நாட்டிற்குள் நுழைய முடியும். எனினும் குறித்த பெண் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளாத நிலையில் நைஜீரியாவில் இருந்து நாட்டிற்குள் பிரவேசிப்பது பிரச்சினைக்குரியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட ஓமிக்ரான் கொவிட் திரிபுடன் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய பெண் எவ்வித கொவிட் தடுப்பூசிகளையும் பெற்றிருக்காத நிலையில் எவ்வாறு வெளிநாட்டுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்? என்பது தொடர்பில் தற்போது சர்ச்சைகள் எழுந்துள்ளன. இவர் கடந்த 24 ஆம் திகதி நைஜீரியாவிலிருந்து இலங்கை வந்திருந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை தொற்றுக்குள்ளானவராக அடையாளம் காணப்பட்டிருந்தார்.

இதேவேளை ஓமிக்ரான் கொவிட் திரிபுடன் பாதிக்கப்பட்ட பெண் நைஜீரியாவில் உள்ள லுனாவா தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பப்பட்ட போதிலும், ஒரு நாள் மாத்திரம் அங்கு தங்க வைக்கப்பட்டதுடன் கடந்த 24 ஆம் திகதி இலங்கை வந்த அவர், 25ஆம் திகதி தனது வீட்டிற்கு திரும்பியுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொற்று அறிகுறி இல்லாத காரணத்தினால் மருத்துவ கண்காணிப்பின் கீழ் சிகிச்சைக்காக வீட்டிற்கு அனுப்பப்பட்ட போதிலும், பிரதேசத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது பிரதேசத்திற்கு பொறுப்பான வைத்திய அதிகாரிக்கு அவர் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மத நம்பிக்கையின் அடிப்படையில் அவர் எவ்வித கொவிட் தடுப்பூசியினையும் பெற்றுக்கொள்ளவில்லை. எனினும் தற்போது குறித்த பெண் மற்றும் கணவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் நேரடி தொடர்பினை பேணிய இரண்டு குடும்பங்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

-தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்டுள்ள வறிய நாடுகளின்-

# பொருளாதார மீட்சிக்கு எந்தவொரு உலக அமைப்பும் உதவவில்லை

-இந்து சமுத்திர மாநாட்டில் ஜனாதிபதி கவலை-

உலகளாவிய தொற்றுப் பரவலைத் தடுக்கும் வேலைத்திட்டத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலைமைத்துவம் வழங்கி வருகின்ற போதிலும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பொருளாதார மீட்சிக்கு, எந்தவோர் உலக அமைப்பும் உதவ முன்வரவில்லை. தொற்றுப் பரவலென்பது, வறிய மற்றும் வல்லரசு நாடுகளை ஒரே விதத்தில் பாதிப்படையச் செய்திருப்பினும், விகிதாசாரப் பாதிப்பின் சுமைகளை வறிய நாடுகளே தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்ட இந்து சமுத்திர மாநாட்டின் ஆரம்ப உரையை நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச மேலும் பேசுகையில்,

அதிகப்படியான உயிர்களைக் காப்பாற்றுவது என்பதை விலை மதிக்க முடியாவிட்டாலும்,தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கு உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக அதிக செலவை ஏற்கவேண்டி ஏற்பட்டுள்ளது. பொருளாதாரச்செயற்பாடுகளின் மந்தகதியால், உலகளாவிய சுற்றுலா, வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிபோன்ற கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளன.அனைத்துப் பிரஜைகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் வரையில், கொவிட் - 19 தொற்றுப் பரவல் இல்லாமல் போகப்போவதில்லை. எனவே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாகமுன்னெடுப்பதற்கு, வல்லரசு நாடுகள் உதவி புரிய வேண்டும்.

உலகளாவிய தொற்றுப் பரவலைத் தடுக்கும் வேலைத்திட்டத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலைமைத்துவம் வழங்கி வருகின்ற போதிலும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பொருளாதார மீட்சிக்கு, எந்தவோர் உலக அமைப்பும் உதவ முன்வரவில்லை. தொற்றுப் பரவலென்பது, வறிய மற்றும் வல்லரசு நாடுகளை ஒரே விதத்தில் பாதிப்படையச் செய்திருப்பினும், விகிதாசாரப் பாதிப்பின் சுமைகளை வறிய நாடுகளே தாங்கிக்கொள்ள வேண்டிஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரங்களுக்கு இது மிகவும் கடினமான சந்தர்ப்பம். தொற்றுநோயால் மேலும் பாதிக்கப்பட்டுள்ள வறிய நாடுகளுக்கு கடன் மன்னிப்பு வழங்கல்,மறுசீரமைப்பை மேற்கொள்ளல் அல்லது கடன் நிவாரணக் காலங்களை வழங்க வல்லரசு நாடுகளும் பலதரப்பு நிறுவனங்களும் நடவடிக்கை எடுத்தால், அது மிகவும் வரவேற்கத்தக்கது.

இதேவேளை மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகவும் கடினமான சவால்களில் ஒன்றாக தற்போதைய காலநிலை நெருக்கடி ''எக்ஸ்-பிரஸ் பேர்ள்'' பேரழிவு என்பது, ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல. ''எம்டி நியூ டைமண்ட்'' கப்பலில்ஏற்பட்ட தீப்பரவல், கூட்டு முயற்சியால் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப் பட்டது. இவ்விரு சம்பவங்களும் சுட்டிக்காட்டக் காரணம், அபாயகரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பைஏற்படுத்தும் பொருட்களை கடற்பரப்புக்குள் கொண்டுசெல்வதில் கடுமையான கட்டுப்பாடுகளின்அவசரத் தேவை காணப்படுவதால் ஆகும். நவீன உபகரணங்களுடன் கூடிய இழுவைப் படகுகள் மூலம் கடல்கடந்த கடற்பகுதியில்மீன்பிடிப்பது குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உள்ளது. இதனால், தேசிய அளவில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டிருக்கும் வறிய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றது.எதிர்காலத்தில், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த சூழலையும் உள்ளூர் பொருளாதாரங்களின் நம்பகத்தன்மையையும் பராமரித்தல் போன்ற பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது முக்கியமாகிறது என்றார்.

# கற்ற சமூகத்தின் மத்தியில் கூட தேர்தல் குறித்து தெளிவுமில்லை

(ரொசான் நாகலிங்கம்)

நாட்டிலுள்ள 99 வீதமானவர்கள் கல்வி அறிவு கொண்டவர்களாக உள்ள போதும் அவர்கள் மத்தியில் அரசியல் குறித்த சரியான தெளிவில்லையென தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிகேவா தெரிவித்துள்ளார்.

2022-2025 வரையான காலப் பகுதிக்கான மூலோபாய செயற்திட்டத்தினை தயாரிப்பதற்காக நாடளாவிய ரீதியில் மக்களது கருத்துகளை அறிந்து கொள்ளும் நோக்கில் தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடலை நடத்தி வருகின்றது.இதன் ஒரு அங்கமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது.இதில் அரசியல்வாதிகள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலை ஆணைக்குழுவின் தவிசாளர் ஆரம்பித்து வைத்து பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டு மேலும் பேசுகையில்:

நாட்டிலுள்ளவர்களில் 99 வீதமானவர்களுக்கு கல்வி அறிவு உள்ள போதும் அவர்கள் மத்தியில் அரசியல் குறித்த சரியான தெளிவு காணப்படுவதில்லை.தேர்தலில் வாக்காளர் வாக்களித்த பின்னர் அவர்கள் வாக்களித்தவரை காணக் கூடியதாக இருக்காது.

பொது மக்கள் வாக்குச்சீட்டை பெட்டியில் போடுவதுடன் மட்டுப்படுகின்றனர். அரசியல் பங்களிப்பு குறைந்த மட்டத்தில் உள்ளது என்றார். (40)

# டொலர் இல்லாததால் லாப் எரிவாயு இல்லை

(க.பிரசன்னா)

இறக்குமதிக்கான கடன் கடிதங்களை திறப்பதற்கு போதுமான டொலர்கள் இல்லாமையினாலேயே சந்தையில் லாஃப் எரிவாயு சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக லாஃப்ஸ் நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச்.வேகபிட்டிய தெரிவித்துள்ளார்.

போதுமான அளவு கடன் கடிதங்கள் திறக்கப்பட்டால் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மூலம் பங்குகளை இறக்குமதி செய்ய முடியும். எரிவாயு இறக்குமதிக்கு அரசாங்கம் போதுமான கடன் கடிதங்களை வழங்கும் பட்சத்தில், பெப்ரவரி மற்றும் மார்ச் மாதத்திற்குள் எரிவாயு விலைகள் கணிசமாகக் குறையும்.

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோரின் தேவை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், எரிவாயு இறக்குமதியைப் பெறுவதற்கு குறுகிய கால நடவடிக்கையாக டொலர்களை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் அதியுயர் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி முனையம் ஆகிய இரண்டும் 100 வீத புரொப்பேன் மற்றும் பியூட்டேன் ஆகியவற்றை சந்தைக்கு வழங்குவதற்காக இறக்குமதி செய்ய முடியும்.

உலக சந்தையில் உற்பத்திப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடையும் ஒரு போக்கு காணப்படுகின்றது. இது எரிவாயு விலைகளில் குறிப்பிடத்தக்க குறைப்புக்கு வழிவகுக்கும். இதேவேளை மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு வினியோகிப்பதற்கு இரண்டு எரிவாயு நிறுவனங்களுக்கும் நுகர்வோர் விவகார அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிட்டுள்ள அறிக்கையில், முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயு நிறுத்தப்பட வேண்டும் எனவும் வாசனையுடன் தொடர்புடைய மெர்காப்டன் இரசாயனம், புதிய தொகுதிகளை வெளியிடுவதற்கு முன்னர் சிலிண்டர்களில் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் பெண்கள் முஸ்லிம்களால் திட்டமிட்டவகையில் மதம் மாற்றம்

- ஜனாதிபதி செயலணிக்கு எடுத்துரைப்பு-

முஸ்லிம்களால் மிகவும் திட்டமிடப்பட்ட வகைகளில் தமிழ் பெண்கள் மத மாற்றம் செய்யப்படுகின்றனர் என்று ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணிக்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழ் அமைப்புகள் மற்றும் இந்து உணர்வாளர்களால் எடுத்து சொல்லப்பட்டுள்ளது.

ஞானசார தேரர் தலைமையிலான செயலணி கடந்த நாட்களில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டு இம் மாவட்ட மக்களின் கருத்துகளை செவிமடுத்து பதிவு செய்தது. இதன் போது தமிழ் அமைப்புகள் மற்றும் இந்து உணர்வாளர்கள் தெரிவித்தவற்றை செயலணி பதிவு செய்துள்ளது அவற்றில் சில வருமாறு,

கிழக்கு மாணத்தில் தமிழ் இந்துக்கள் அதிக பிரச்சினைகளுடன் வாழ்கின்றனர். முஸ்லிம்களால் திட்டமிடப்பட்ட வகைகளில் மத மாற்றம் செய்யப்படுகின்றனர். 'லவ் ஜகாத்' என்ற கட்டமைப்பு மூலமாக தமிழ் பெண்களை முஸ்லிம் இளைஞர்கள் இலக்கு வைக்கின்றனர்.

வறுமை, தொழில் வாய்ப்பு இன்மை ஆகியவற்றால் தமிழ் பெண்கள் முஸ்லிம் கடைகளில் வேலை செய்ய நேர்கிறது. இதை முஸ்லிம்கள் வாய்ப்பாக எடுக்கின்றனர். அப்பாவி தமிழ் பெண்கள் காதலின் பெயரால் இவர்களின் வலைகளில் சிக்கி மதம் மாற நேர்கின்றது. இதே போல பல விதமான சலுகைகளையும் காட்டி தமிழ் பெண்களை வசீகரிக்கின்றனர். தமிழ் பாடசாலைகளில் கற்பிக்கின்ற முஸ்லிம் ஆசிரியர்களும் தமிழ் மாணவிகளை மயக்கி எடுக்கின்றனர். தமிழ் பெண்களின் வாழ்க்கை மொத்தத்தில் சீரழிந்து விடுகின்றது.

இந்நாட்டின் பூர்வீக குடிகள் தமிழர்களும், சிங்களவர்களுமே. ஆனால் வந்தேறு குடிகளான முஸ்லிம்கள் நிலத்துக்கு சொந்தம் கொண்டாடுகின்றனர். தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் முஸ்லிம்களால் திட்டமிடப்பட்ட வகைகளில் கபளீகரம் செய்யப்பட்டு ஊர்களின் பெயர்கள்கூட மாற்றப்பட்டு உள்ளன. அதே போல தமிழ் பாடசாலைகள் பெயர் மாற்றப்பட்டு உள்ளன. இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு சந்தைகளாக மாற்றப்பட்டன. முஸ்லிம் அதிகாரிகளின் உதவியுடன் இவை நடக்கின்றன.

இது அராபிய நாடு அல்ல. ஆனால் அராபிய கலாசாரம் திணிக்கப்படுகின்றது. காத்தான்குடியை சவூதி அரேபியா போன்று ஆக்கி வைத்து உள்ளார்கள். காதி நீதிமன்ற முறைமை நமது நாட்டுக்கு தேவை அற்றது. தமிழ் இந்துகளால் பசுக்கள் தெய்வமாக மதிக்கப்படுகின்றன. சிங்கள பௌத்தர்களும் பசுக்களை கொல்வதில்லை. ஆனால் இறைச்சிக்காக மாடுகளை முஸ்லிம்கள் அறுக்கின்றனர். இது முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். மாடறுப்பு தடை சட்டம் அமுலுக்கு வர வேண்டும் எனவும் செயலணிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக ஈழ அகதிகளை வாக்காளராக பதிய கோரிக்கை விடுக்கப்படவில்லை

-தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிகேவா-

(ரொசான் நாகலிங்கம்)

தமிழகத்தில் அகதியாவுள்ள இலங்கை பிரஜைகள் வாக்காளர்களாக பதிவு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்படவில்லையென தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிகேவா தெரிவித்துள்ளதுடன் தகுதியுள்ள பிரஜைகள் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடெனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் நடத்திய ஊடக சந்திப்பில் ஊடகவியலாளரொருவர் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முன் வைத்துள்ள 40 யோசனையில் வெளிநாட்டிலுள்ள இலங்கையருக்கு வாக்களிக்கும் உரிமையை பெற்றுக் கொடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது போல் தமிழகத்திலுள்ள அகதிகள் வாக்காளராக பதிவு செய்யப்படுவது குறித்து குறிப்பிடப்படாமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் பதிலளிக்கையில்:

தேர்தல் ஆணைக்குழுவை பொறுத்தவரையில் தகுதியுள்ளவர்கள் அனைவரும் வாக்குரிமையை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளோம்.

இதன் பிரகாரம் வைத்தியசாலையிலுள்ளவர்கள், நோயாளர்கள்,விளக்கமறியலில் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினருக்கும் வாக்குரிமையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என கோருகின்றோம். இது தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு யோசனை முன்வைத்துள்ளோம். இவ்வாறான நிலையில் தமிழகத்திலுள்ள அகதிகள் வாக்காளராக பதியுமாறு கோரிக்கையை முன்வைக்கவில்லையென்றார். (40)

-பாகிஸ்தானில் கொல்லப்பட்ட-

# பிரியந்த குமாரவின் உடல் இன்று வருகிறது

பாகிஸ்தானில் சியால்கோட் பகுதியில் 3 ஆம் திகதி கலகக் கும்பலால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்ட தியவடனகே தொன் நந்தசிறி பிரியந்த குமாரவின் உடல் இன்று 6 ஆம் திகதி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை ஊடாக அரச செலவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. சடலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அவரது அடுத்த நிலை உறவினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டு அமைச்சு இந்த விடயத்தை ஒருங்கிணைத்து வருகின்றது.

பிரியந்த குமாரவின் மரணம் தொடர்பிலான விசாரணை அறிக்கை ஒன்றை வழங்குமாறு இஸ்லாமாபாத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சிடம் கோரியுள்ளது.



யாழ். மாவட்டத்தில் கடந்த தொடர் மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை 'வெள்ளத்தில் மக்களை இருந்து மீட்போம்' எனும் தொனிப் பொருளில் கோப் ஹவுஸ் லங்கா பவுண்டேசனால் நேற்று ஊர்காவற்துறை சரவணை, இளவாளை, நீர்வேலி பகுதிகளில் 120 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. குறித்த செயற்திட்டத்துக்கு சமூக சேவையாளர்களான ரஜீவ் நேரு மற்றும் மகாதேவா அமரநாத் ஆகியோர் நிதியுதவியினை வழங்கியிருந்தனர்.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
திங்கட்கிழமை 06 டிசம்பர் 2021 Monday 06th December 2021

## பொதுமக்களுக்கு இடையூறுகளை மேலும் அதிகரிக்கச்செய்யும் மின் விநியோகத் தடை

நாட்டின் சகல பகுதிகளிலும் கடந்த வெள்ளிக்கிழமை மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது . இது உண்மையில், சாதாரணமாக நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டை விட அதிகமாகும். கொரோனா வைரஸ் பெருந்தொற்றுடன் பல்வேறு துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு இந்த மின் தடை எதிர்காலம் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை மேலும் சிதைப்பதாக அமைந்திருக்கிறது . வெள்ளிக்கிழமை பகல் நேரத்தில் நாடு முழுவதும் சுமார் பல மணி நேர மின்வெட்டு ஏற்பட்டிருந்தது . இது பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வீட்டு வேலைகளுக்கு பெரும் பாதிப்பாக இருந்தது. அதைத் தடுக்கவும், விரைவாக மின்சாரத்தை மீட்டெடுக்கவும் தவறியதற்காக அரசாங்கம் அரச மற்றும் தனியார் துறையின் எதிர்ப்பை கடுமையாக எதிர்கொண்டது. இந்த மின்தடைக்கு மின்னழுத்தமே காரணமென முதலில் அரசாங்கம் தெரிவித்திருந்தது . ஆனால் பின்னர் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர். மணதுங்க, இது நாசவேலையெனச் சந்தேகிப்பதாகவும் உரிய விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால் அரசின் குற்றச்சாட்டை தொழிற்சங்கங்கள் மறுத்துள்ள நிலையில், மின்வெட்டு குறித்து விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக கூறப்பட்டது.

தொழிற்சங்கங்களின் சட்டப்படி வேலை நிறுத்தப் போராட்டத்தின் மத்தியில் மின் விநியோகத் தடை ஏற்பட்டபோதும் அவை அன்றைய தினத்தின் பிற்பொழுதில் போராட்டத்தை நிறுத்தியிருந்தன .ஆயினும் மாலை 4.30 மணிக்குப் பின்னரே நாடு முழுவதும் மின்சாரம் படிப்படியாகத் திரும்பியது . ஊழியர்கள் வேண்டுமென்றே மின்சாரத்தை வழங்குவதில் தாமதம் செய்ததாக அதிகாரிகள் குற்றம் சாட்டினர்.அன்றைய தினம் மாலை வரையான காலப்பகுதியில் நுரைச்சோலை தவிர்ந்த அனைத்து மின் உற்பத்தி நிலையங்களும் வழமையான நிலைக்கு திரும்பியிருந்ததாக கூறப்பட்டது.அதேவேளை அந்த நிலக்கரி மின் நிலையம் செயற்பட இரண்டு நாட்களாகுமென எதிர்பார்க்கப்படுவதாக கூறப்பட்டது.அதேவேளை நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்று நிலையங்கள் முழுமையாக இயங்கும் வரை அடுத்த சில நாட்களுக்கு நாடளாவிய ரீதியில் குறுகிய கால மின்சாரத் தடைகள் ஏற்படக்கூடுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. ஏற்கனவே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு , அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, சமையல் வாயுவின் பயன்பாட்டின் பாதுகாப்பு குறித்த கவலைகளால் குடும்பங்கள் தத்தளிக்கின்றன. இந்நிலையில் மின் விநியோகத் தடை குடும்பங்களை மேலும் கடுமையான சிரமத்திற்கு உள்ளாக்கியிருந்தது. மின்பிறப்பாக்கிகள் இல்லாத அரசாங்க அலுவலகங்கள்,வர்த்தக நிறுவனங்கள் . தனியார் துறை நிறுவனங்களின் பணிகளுக்கும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

உண்மையில் இதற்கு எவரை குறை கூறுவது என்பது தெரியாமல் இருப்பதாக பொதுமக்கள் மத்தியில் கவலையும் விசனமும் வெளிப்படுத்தப்படுவதை காணமுடிகிறது . சிலர் அரசாங்கத்தை இது மற்றொரு தோல்வியென குற்றம் சாட்டுகின்றனர். அதேவேளை தமது கோரிக்கைகள் நியாயமானதாக இருந்தாலும் கூட தொழிற்சங்கங்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்வதாக கவலையை வெளிப்படுத்தினர்.எவ்வாறாயினும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட நியூ ஃபோர்ட்ரஸ் எனர்ஜியுடன் ஒப்பந்தம் செய்து, யுகதனவி உலையை ஓரளவு தனியார்மயமாக்குவது மற்றும் விரிவாக்குவது உட்பட பல பிரச்சினைகளில் மின்சார சபை அதிகாரிகளும் தொழிற்சங்கங்களும் முரண்பட்டுள்ளதால், வெள்ளியன்று ஏற்பட்ட மின் விநியோகத் தடை தற்செயலாக ஏற்பட்டதா என்பது பற்றி சந்தேகங்களும் வெளிப்படுத்தப்படுகின்றன .அந்த உடன்படிக்கைக்கு எதிராக பல அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்க நிறுவனத்துடனான அரசாங்கத்தின் ஒப்பந்தம் இப்போது வழக்கில் உள்ளது.

நாட்டில் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு, கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்பு, இரசாயன உரத் தடையால் விவசாயிகளுக்குஏற்பட்டிருந்த நெருக்கடி, அந்நிய செலாவணி கையிருப்பு தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள நெருக்கடி ,அதிகரித்துவரும் கடன் சுமை, உணவுப் பொருட்களின் விலை உயர்வு, நில அபகரிப்பு, நேர்மையான அரச ஊழியர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்தல், 2019 ஏப்ரலில் நடந்த உயிர்த்த ஞாயிறு படுகொலையில் சம்பந்தப்பட்ட உண்மையான குற்றவாளிகளை மூடிமறைப்பதாக வெளிப்படுத்தப்படும் விமர்சனங்களென பட்டியல் நீண்டுகொண்டு செல்கிறது. அதேவேளை தொழில் வாய்ப்புகளைத் தேடி புலம்பெயர்வதற்கு இளைஞர்கள் கூட்டம் அலைமோதுகிறது.மக்களால் மக்களுக்காக, மக்களின் என்ற திட்டம் மக்களின் அடிப்படை மனித உரிமைகளான மின்சாரம் மற்றும் எரிவாயு ஆகியவற்றைப் பறிக்கும் திட்டம் அல்லவெனவும் , இது முன்னேற்றத்துக்கு வழிவகுக்காதெனவும் மாறாக வறுமையும் துன்பமும் நிலவிய ,இருள் சூழ்ந்த காலத்துக்கே வழிவகுக்குமென்பதையும் பற்றிய தெளிவான புரிதலே அவசியம் .யாவற்றுக்கும் மேலாக தற்போதைய இக்கட்டான நிலைமையில் பொதுமக்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெற அரசாங்கம் இடமளிக்கக் கூடாது.

# பயங்கரவாதத்தை கையாளும் எந்தவொரு சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் தரத்தை கொண்டிருக்க வேண்டும்

**பயங்கரவாதத் தடைச் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான அரசின் முன்மொழிவுகள் குறித்து சிவில் சமூகத்தின் அறிக்கை**

*'வரலாற்று ரீதியாக, பல தசாப்தங்களாக தமிழ் சமூகத்திற்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்திற்கும் எதிரான ஆயுதமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளது . இதனால் இந்த சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இது ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது சிங்களவர்களுக்கு எதிராகவும் இப்போது எதிர்ப்பாளர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டது.பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான பிரச்சினைகளை சமாளிக்க முற்படும் எந்தவொரு செயல்முறையும், சட்டத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடு உட்பட நீதியைப் பெறுவதை உறுதிசெய்ய இந்தக் காரணியை கவனிக்க வேண்டும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்'*

2021 ஜூனில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை 'மறுசீரமைப்பு' செய்வதாக அறிவித்ததுடன், அதற்காக ஒரு அமைச்சரவை துணைக் குழுவையும் நியமித்தது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் அமைச்சு உபகுழுவின் கீழ் செயற்படும் தொழில்நுட்பக் குழுவின் தலைவருமான கமல் குணரத்ன, தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகளை 2021 நவம்பரில் அமைச்சர் உபகுழுவிடம் சமர்ப்பித்ததாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டது.

வரலாற்று ரீதியாக, பல தசாப்தங்களாக தமிழ் சமூகத்திற்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்திற்கும் எதிரான ஆயுதமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளது. இதனால் இந்த சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இது ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது சிங்களவர்களுக்கு எதிராகவும் இப்போது எதிர்ப்பாளர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டது. பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான பிரச்சினைகளை சமாளிக்க முற்படும் எந்தவொரு செயல்முறையும், சட்டத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடு உட்பட நீதியைப் பெறுவதை உறுதிசெய்ய இந்தக் காரணியை கவனிக்க வேண்டும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 'மறுசீரமைப்பு' என்று கூறப்படும் திட்டங்களை அரசாங்கம் பொது மக்களுடன் பகிர்ந்துகொள்ளாத நிலையில், 29 நவம்பர் 2021 இல் ஸ்ரீலங்கா கொன்சென்ஸஸ் கலெக்டிவ் கூட்டுக்குழுவின் (எஸ். எல். சி. சி. ) அறிக்கை, அரசாங்கம் மேற்படி குழுவுடன் சீர்திருத்தத்திற்கான முன்மொழிவுகளை பகிர்ந்துகொண்டதாக அமைகிறது என்பதை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம் . அரசாங்கத்தால் உத்தியோகபூர்வ தகவல் தொடர்பு இல்லாத நிலையில், எஸ். எல் .சி. சி.அறிக்கையில் உள்ள அம்சங்களை அரசாங்கத்தால் ஆலோசிக்கப்படும் மாற்றங்களாக நாங்கள் கருதுகிறோம். முன்மொழியப்பட்ட அனைத்து மாற்றங்களும் ஏற்கனவே சட்டத்தில் உள்ளன. மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்களை செயற்படுத்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள எந்தவொரு குறைபாட்டையும் நிவர்த்தி செய்யவில்லை என்பதை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யவும் இடைக்காலத்தில் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு உடனடியாக தடை விதிக்கவும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். சட்டத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் சமூகங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க இது உள்ளது. பயங்கரவாதத்தை கையாள்வதற்கான எந்தவொரு சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் தரத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். இது சம்பந்தமாக, கடுமையான மனித உரிமை மீறல்களை விளைவிக்கும் மற்றும் அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய பின்பற்ற வேண்டிய குறைந்தபட்ச தரநிலைகளுடனான சட்ட ஏற்பாடுகளை கீழே சமர்ப்பித்திருக்கின்றோம்.

கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான அம்சம் என்னவென்றால், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது இலங்கை அரசாங்கம் மதிப்பளித்து பாதுகாக்கவேண்டிய கடப்பாடு கொண்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனம் (ஐ . சி . சி.பி. ஆர். ) போன்ற சர்வதேச சாசனங்களில் உள்ள அடிப்படை மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்காத மனித உரிமைகள் குறைபாடுள்ள சட்டமாக பயங்கரவாத தடைச் சட்டம் இருக்கின்றது என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணி . இந்தச் சூழலில், கடுமையான மனித உரிமை மீறல்களை விளைவிக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ள முக்கிய விதிகள் பின்வருமாறு:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பயங்கரவாதம் பற்றிய வரையறை இல்லை. மாறாக, விதிக்கப்பட்ட குற்றங்கள் குற்றவியல் சட்டம் போன்ற ஏனைய சட்டங்களில் காணப்படுகின்றன. அவை பயங்கரவாத தடைச் சட்டம் பற்றி குறிப்பிடுகின்றன.எனவே, ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் பயங்கரவாத தடைச் சட்டம் பொருந்துமா என்பது ஒரு அகநிலை முடிவாகும். இது புறநிலை தரங்களுக்கு மாறாக தனிப்பட்ட தப்பெண்ணம் மற்றும் சார்பு மூலம் வடிவமைக்கப்படலாம். இது சம்பந்தமாக, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அதேவேளையில் பயங்கரவாதத்தை எதிர்ப்பது தொடர்பாக ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் வகுத்துள்ள வரையறையை பயங்கரவாத தடைச் சட்டம் கடைப்பிடிக்கவில்லை. உதாரணமாக,உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னரான தாக்குதல்களில் அரேபிய புத்தகங்கள் மற்றும் அலங்கார வாள்களுடன் கூடிய நபர்கள் கூட கைது செய்யப்பட்டனர். அதேபோன்று போரின் முடிவில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் உரிய அடிப்படை பாதுகாப்பு செயல்முறை இல்லாததால், தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக் காவலில் வைப்பது இன்று வரை தொடர்கிறது. இது நீண்ட கால நிர்வாக தடுப்புக் காவலில் இருந்து அதிகரிக்கிறது.உதாரணமாக , தங்களின் சாதாரண வேலையிலோ அல்லது தனிப்பட்ட வாழ்க்கையிலோ குற்றம் சாட்டப்பட்ட ஒரு ஆளுடன் தொடர்புள்ள நபர்கள் விசாரணைகள் நடத்தப்படாமலேயே கைது செய்யப்பட்டு, பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை பல தசாப்தங்களாக நாங்கள் கண்டிருக்கிறோம்.

விசாரணை அல்லது நியாயமான சந்தேகத்திற்குப் பிறகு ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமே கைது செய்யப்பட வேண்டும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.தடுப்புக் காலம் என்பது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டதாக இருக்க வேண்டும். மேலும் தடுப்புக் காவலின் எந்த நீடிப்பும் நீதிபதியால் செய்யப்பட வேண்டும். அவர் தொடர்ந்து காவலில் இருப்பதற்கான காரணங்களில் திருப்தி அடைந்து, காவலை நீடிக்கலாமா வேண்டாமா என்பது குறித்து தற்துணிபுடன் செயற்பட வேண்டும்.

உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அறிக்கைகள் உட்பட ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் உள்ளன. இது ஒரு உதவி பொலிஸ் அத்தியட்சர் அல்லது அதற்கு மேற்பட்டோருக்கு அளிக்கப்பட்ட வாக்குமூலங்களை ஆதாரமாக ஏற்றுக்கொள்வதாகும். வாக்குமூலங்களைப் பெறுவதற்காக சித்திரவதைக்கு ஆளாகியிருப்பதை இது விளக்குகிறது.இது சித்திரவதையின் பயன்பாட்டை இயல்பாக்கியது மற்றும் வேரூன்றியுள்ளது. விசாரணையின் போது ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று தீர்ப்பளிக்கப்பட்டாலும் அந்த விதியின் இருப்பு ஆட்களை சித்திரவதைக்கு ஆளாக செய்துவிடுகிறது. இது குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபரின் அடிப்படை நடைமுறை மற்றும் நியாயமான விசாரணை உரிமைகளை மீறுவது மட்டுமல்லாமல், குற்றவியல் நீதிமுறைமையின் திறமையை கேள்விக்குள்ளாக்குகிறது. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நம்பி வழக்குத் தொடர வேண்டுமென்ற விதிமுறைக்கு மாறான இத்தகைய விதிக்கு சட்டத்தில் இடமில்லை. மாறாக, குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் சாட்சிய ஆணை ஆகியவற்றில் உள்ள தற்போதைய விதிகள் ஒப்புதல்வாக்குமூலங்கள் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டும்.

பிரிவு 7(3) ஒரு நபரை நீதிமன்றக் காவலில் இருந்து விசாரணைக்காக வேறு எந்த இடத்திற்கும் அழைத்துச் செல்ல அனுமதிக்கிறது. பிரிவு 15ஏ பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு, ஒருவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின்னரும் கூட, ஒரு நபரின் தடுப்புக் காவலின் இடத்தை தீர்மானிக்க அதிகாரம் அளிக்கிறது. இது நீதித்துறை காவலில் இருந்து ஒரு நபரை நீக்குகிறது மற்றும் நீதித்துறை உத்தரவை மீறுவதற்கு செயலாளருக்கு அதிகாரம் அளிக்கிறது. 2021 செப்டெம்பரில் சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் கைதிகள் புனர்வாழ்வு விவகார அமைச்சர் அனுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை ஆயுதம் காட்டி மிரட்டியதாகவும், வாய்மொழியாக துஷ்பிரயோகம் செய்ததாகவும் கூறப்பட்ட சம்பவம், நீதிமன்ற காவலில் இருந்தபோதும், அத்தகைய நபர்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பின்மையை எடுத்துக்காட்டுகிறது. அவர்களை நீதிமன்ற காவலில் இருந்து நீக்குவது அவர்களின் பாதிப்பை அதிகப்படுத்தும். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறைச்சாலைகள் பற்றிய தேசிய ஆய்வில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளபடி, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள நபர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் நீதிமன்றக் காவலில் இருந்து வெளியே எடுக்கப்படும் போது அல்லது வேறு இடங்களில் தடுத்துவைக்கப்படும் போது கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆட்கள் நீண்டகாலமாக விசாரணைக்கு முன்னரான காவலில் உள்ளனர். ஏனெனில், சட்டமா அதிபர் பிணையில் விடுவிக்க ஒப்புதல் அளிக்காத வரை, அத்தகைய நபர்கள் விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் இருக்க வேண்டும் என்று சட்டம் கோருகிறது. அனைத்து கைதுகளுக்கும் பிணைச் சட்டத்தின் விதிகள் பொருந்த வேண்டும். மேலும் பிணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்கான சூழ்நிலைகள் ஏதேனும் இருந்தால் மட்டுமே பிணை மறுக்கப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் பாதுகாப்பு அமைச்சருக்கு 18 மாதங்கள் வரை கட்டுப்பாடு உத்தரவுகளை வழங்க அனுமதிக்கிறது. மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையோ, நிகழ்வுகளில் பேசுவதையோ அல்லது ஒரு நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குவதையோ தடுக்க கட்டுப்பாடு ஆணைகள் பயன்படுத்தப்படலாம். இத்தகைய உத்தரவுகள், உரிய நடைமுறை, வெளிப்படைத்தன்மை அல்லது பொறுப்புக்கூறல் இல்லாமல் தன்னிச்சையாக அமைச்சரால் பிரஜைகளின் உரிமைகளைக் குறைக்க அனுமதிக்கின்றன.

### பாதுகாப்புகள்

தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவர் முதன்முறையாக நிர்வாகத் தடுப்புக் காவல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் சவால் செய்ய முடியும் என்று அரசாங்கம் கூறியதாக எஸ். எல். சி. சி. அறிக்கை குறிப்பிடுகிறது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தன்னிச்சையான தடுப்புக் காவல்களை சவால் செய்யும் உரிமை இலங்கையின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது மற்றும் எந்தவொரு முன்மொழியப்பட்ட மறுசீரமைப்பும் வழங்கக்கூடிய புதிய உரிமை அல்ல என்பதை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம்.. தற்போதுள்ள இந்த உரிமையை

(06 ஆம் பக்கம் பார்க்க...)



# புதிய பஸ் நிலையத்தின் முகாமைத்துவம் இ.போ.சவிடமே இருக்க வேண்டும்

## -வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை-



யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நெடுந்தூர பஸ் தரிப்பிடத்தின் முகாமைத்துவம், இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பணிமனையிடம் இருக்கவேண்டுமென, வடமாகாண ஆளுநருக்கு தொழிற்சங்கம் சார்பில், கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக அமைக்கப்பட்ட பஸ் நிலையத்தில், தனியாருடன் இணைந்து சேவை வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

இலங்கையில் தனித்துவமான சேவையை வழங்கி வரும், இலங்கை போக்குவரத்துச் சபை, தனக்குரிய இடத்தில் சேவை வழங்குவதற்கே, விருப்பம் தெரிவித்துள்ளது.

புதிய பஸ் நிலையத்தை அமைத்து தருமாறு, இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய தொழிற்சங்கங்கள் யாரிடமும் கோரிக்கை முன்வைக்கவில்லை.

புதிய பஸ் நிலையத்தை பயன்படுத்த வேண்டுமானால், அதன் முகாமைத்துவம் இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையின் முகாமைத்துவத்தில் இடம்பெற வேண்டும்.அத்துடன், யாழ்.பஸ் தரிப்பு நிலையத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு, எந்தச் சந்தர்ப்பத்திலும் தாம் தயாராக இருப்பதாகவும் அவ்வாறு அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு முன்னர், மீண்டும் எம்மிடமே கையளிக்கப்படுமென்ற உத்தரவாதம் எழுத்துமூலம் அளிக்கப்பட வேண்டுமென தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன. (75)

# வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய சாரதி அனுமதிப்பத்திரம்




இந்தியப் பிரஜை ஒருவரின் சாரதி அனுமதிப்பத்திரம், வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை கரையொதுங்கியது.

தமிழகத்தின் ஆலம்பத்தூர் சிதம்பரம் தாலுகாவைச் சேர்ந்த, ஆனந்தகுமார் பரமசிவம் (வயது – 47) என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரமே இவ்வாறு கரையொதுங்கிய நிலையில், மீட்கப்பட்டுள்ளது.

வடபகுதிக் கடலில் ஆறு நாட்களிற்குள் இனந்தெரியாத ஆறு சடலங்கள் கரையொதுங்கின. கடந்த மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு மணற்காடு மற்றும் வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதிகளில் இரு சடலங்களும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு கடற்கரையில், ஒரு சடலமும், 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெற்றிலைக்கேணி கடற்கரைப் பகுதியில் ஒரு சடலமும், கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை சாக்கோட்டை மற்றும் வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியிலுமாக, இதுவரை 6 சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. குறித்த 06 சடலங்களும், அடையாளம் காணப்படாத நிலையில், சாரதி அனுமதிப்பத்திரமொன்று கரையொதுங்கியுள்ளது. (44)

# முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கிளிநொச்சி விஜயம்



முன்னாள் அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து அழைக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடலொன்றில் அவர் ஈடுப்பட்டார்.

இதன்போது மக்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் குறிப்பாக பசளை, வீடு உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில், அவரிடம் கருத்துக்களை முன்வைத்தனர். அதற்குப் பதிலளித்த அவர், குறித்த பிரச்சினைகள் தொடர்பில் எழுத்து மூலமாகத் தருமாறும், அதற்கு பொருத்தமானவர்களிற்கு தகவலை வழங்கி, தீர்வுகளைப் பெற்று தருவதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார். (55)

# பிரதேச சபை ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் இருவர் கைது



முள்ளியவளை பிரதேச சபையின் சுகாதார ஊழியர்கள் பணிபுரிந்து கொண்டிருந்த வேளை, அவர்கள் மீது நான்கு பேர் கொண்ட குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

காட்டுவிநாயகர் ஆலய முன்பக்க வீதியினை, முள்ளிவளை பிரதேச சபையின் உப அலுவலக சுகாதார ஊழியர்கள் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை, இரண்டு உந்துருளியில் நான்கு பேர் கொண்ட கும்பல், பிரதேச சபை ஊழியர்களின் காட்டுக்கத்தியினைப் பறித்து, தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில், முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் பிரதேச சபையினால் முறைப்பாடு செய்யப்பட்டது. மேற்படி சம்பவம் தொடர்பில், இரண்டு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.இவர்களை, முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் பதில் நீதிபதி க.பரஞ்சோதி அவர்களின் வாசல்தலத்தில் நேற்று முன்னிலைப்படுத்தியபோது, இவர்களை எதிர்வரும் 09ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, உத்தரவிட்டுள்ளதுடன்,ஏனைய இரண்டு பேரையும் கைதுசெய்து, நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு, பொலிஸாருக்குப் பணித்துள்ளார். (15)

# சந்தைப்பால வீதியை திருத்தியமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குற்பட்ட, பிரதான வீதியான பாண்டியன்குளம்-நட்டாங்கண்டல் சந்தைவீதி பாலத்தில் ஏற்பட்டுள்ள, ஆபத்தான பாரிய குழி காரணமாக, அப்பகுதியூடாகப் பயணம் செய்வது, ஆபத்தானதாக முடியுமென, பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். குறித்த பாலத்தில் நீண்டகாலமாக பிரச்சனை காணப்படும் காரணத்தினால், , மாந்தைகிழக்குப் பகுதியில் இடம்பெற்றுவரும் பேருந்து சேவைகள் மாற்றுப் பாதையூடாகவே இடம்பெற்று வருவதாகவும், தெரிவித்தனர்.இதனால், இப்பாலத்தை வெகு விரைவில் சீர்செய்து, பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்குமாறும், அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (55)


## சேவைநலன் பாராட்டு



### திரு.ஜோசப் பிரான்ஸிஸ் றோய்நேசராசா

(Maths Trd, BA, PGDE, SLTS -1)

### சேவை விபரம்


| | |
|---|---|
| நு/தலவாக்கலை த.ம.வி | 02.05.1983-15.05.1983 |
| நு/ ஸ்ரேளிங் த.வி | 16.05.1983-28.02.1986 |
| யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை | 01.03.1986-31.12.1987 |
| நு/கொட்டக்கலை த.ம.வி | 01.01.1988-28.02.1990 |
| யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை | 01.03.1990-28.02.1999 |
| யா/ கொட்டடி நமச்சிவாய வித்தியாலயம் | 01.03.1999-07.03.2006 |
| யா/ புனித மரியாள் றோ.க. வித்தியாலயம் | 08.03.2006-02.07.2007 |
| யா/ புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலயம் | 03.07.2007-26.06.2012 |
| யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் | 27.06.2012-13.05.2013 |
| யா/ பூம்புகார் அ.த.க. பாடசாலை | 14.05.2013-05.12.2021 |

ஆசிரிய சேவையில் 39 வருடங்கள் அளப்பரிய சேவை யாற்றிய எமது பாடசாலை ஆசிரியர் திரு.ஜோசப்பிரான்ஸிஸ் றோய் நேசராஜா அவர்கள் இன்று (06.12.2021) அகவை அறுபதில் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவர் சீருடனும் சிறப்புடனும் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

யா/பூம்புகார் அ.த.க. பாடசாலைச் சமூகம்


# பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கண்டித்து மலையகத்தில் விழிப்புணர்வு நிகழ்வுகள்



பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து, மலையகத்தின் பல பாகங்களிலும், பல்வேறு விழிப்புணர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் வன்புணர்வுகளை நிறுத்துவோம் எனும் தொனிப்பொருளில் புரொடெக்ட் அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வுகள் நோர்வூட் நகரில் நேற்று இடம்பெற்றது.

பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான புரொடெக்ட் அமைப்பின் தலைவி கருப்பையா மைதிலி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், நோர்வூட் நகரில் வீதி நாடகமும், விழிப்புணர்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அரச சார்பற்ற அதிகாரிகள், சிவில் அமைப்பினர், உட்பட புரொடெக்ட் அமைப்பின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பெண்கள், சிறார்கள் எனப் பலரும் கொண்டனர்.

# கணவனின் மருத்துவத் தேவைக்காக கருணையுள்ளவர்களிடம் உதவி கோரும் பெண்மணி



தனது 32 வயதினிலே இரு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில், எதிர்காலம் பற்றிய எண்ணற்ற கனவுகளோடு உயிர்வாழப் போராடும் இளம் குடும்பஸ்தரின் உயிர் காக்க உதவுமாறு அந்தக் குடும்பஸ்தரின் மனைவி கோரிக்கை விடுத்துள்ளார். கிளிநொச்சி புதுமுறிப்பு பாடசாலை முன் வீதியைச் சேர்ந்த செபஸ்தியான்பிள்ளை தேவராசா (தே.அ.அ இல 198912703797) என்பவரின் மனைவியே கருணையுள்ளம் கொண்டவர்களிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்

1 1/2 வயது பூர்த்தியாகியுள்ள எனது பிள்ளைக்காகவேனும், உயிர் காக்க உதவுமாறு, அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தப் பெண்ணின் கணவர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், சத்திரசிகிச்சை செய்வதற்கு 45 இலட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் அவர் கோரியுள்ளார். இவரது மக்கள் வங்கி கணக்கு இலக்கம்: 048200390018363 இவரது தொலைபேசி இலக்கம் : 0765335356 அல்லது 0774293115


## சேவை நலன் பாராட்டு

### திரு.N.P.ஸ்ரீந்திரன் (ஆசிரிய ஆலோசகர்)

சேவை விபரம்

| | |
|---|---|
| ப/தொட்டுலாகல த.க.வித் - ஆசிரியர் முதல் நியமனம் | 16.04.1985 - 30.05.1989 |
| யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித் - ஆசிரியர் | 01.06.1989 - 11.01.1994 |
| யா/மீசாலை வீரசிங்கம் மகா வித் - ஆசிரியர் | 12.01.1994 - 02.01.1995 |
| யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித் - ஆசிரியர் | 03.01.1995 - 31.01.1995 |
| யா/ நாவற்குழி மகா வித் - ஆசிரியர் | 01.02.1995 - 10.06.1997 |
| யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி - ஆசிரியர் | 11.06.1997 - 24.02.2004 |
| யா/ நாவற்குழி மகா வித் - ஆசிரியர் | 25.02.2004 - 30.11.2005 |
| தென்மராட்சி கல்வி வலயம் - ஆ.ஆலோசகர் | 01.12.2005 - 21.05.2006 |
| வலிகாமம் கல்வி வலயம் - ஆ.ஆலோசகர் | 22.05.2006 - 05.12.2021 |




### பணி விபரம்

- B.A(Hons),M.A,Dip.in.Ed, சைவப்புலவர், கொழும்பு பல்கலை சட்டத்துறை மாணவன்.
- ஆசிரிய பணி 20 வருடங்கள். ஆசிரிய ஆலோசகர் பணி 16 வருடங்கள்.
- இந்துசமயம், சைவநெறி இந்து நாகரிகம் ஆகிய பாடங்களில் ஆசிரிய ஆலோசகர் சேவை வழங்கியவர்.
- G.C.E O/L, A/L பிரதம பரீட்சகர், மேலதிக பிரதமர் பரீட்சகர் பணியில் 18 வருடங்கள்.
- இந்துசமய பண்புப் பயிற்சி முகாம்களை மாணவர்களுக்காக நடத்தி சைவ விழுமிய மேம்பாட்டை ஏற்படுத்தியவர்.

கல்வி புலச் சேவையாளனை, சைவ சேவையாளனை இன்று (06.12.2021) அகவை அறுபதில் மணி விழாக்காலத்தில் வாழ்த்தி மகிழ்வடைகிறோம். ஆயுள் ஆரோக்கியத்துடன் பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்
வலிகாமம் கல்வி வலயம், மருதனார்மடம்.

# பாகிஸ்தானில் இலங்கையர் கொலை; மருத்துவ அறிக்கையில் அதிர்ச்சி தகவல்

பாகிஸ்தானில் கொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் மரணத்தின் பின்னர் இடம்பெற்ற பிரேத பரிசோதனைகள் மூலம் அவர் கொல்லப்பட்டமை குறித்த அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் கொலை செய்யப்பட முன்னர் அவரின் தலை மீது மிகக் கடும் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. மேலும் அவரது உடலைத் தீயிட்டுக் கொளுத்துவதற்கு முன்னர் அவரது கைகால்களை முறாகச் சேதப்படுத்தியுள்ளனர் என பிரேதப்பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச பரிசோதனை அறிக்கையை மேற்கோள்காட்டி 'சாமா' தொலைக்காட்சி வெளியிட்டுள்ள செய்தியில் ,அவரது தலையில் மிகக் கடுமையாக பல தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் மூளை வரை அது சென்றதால் மரணம் நிகழ்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறை கும்பல் அவரது கைகால்களை முற்றாக அடித்து நொருக்கி விட்டது எனப் பிரதேச பரிசோதனை அறிக்கையை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

அவரது திசுக்களில் 99 வீதமானவை எரிகாயம் மற்றும் காயங்களால் சேதமாகிவிட்டன. காலின் அடிப்பகுதி தவிர உடலின் அனைத்து பாகங்களும் எரிந்துவிட்டன என பிரேதப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரியந்தவின் உடலை இலங்கை தூதரகத்திடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இளவாலையில் நடந்த இரத்ததான முகாம்; ஆர்வத்துடன் பங்கேற்ற இளைஞர் யுவதிகள்



யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற்கொண்டு, இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில், கொழும்பு அன்னபூரணி அமைப்பின் அனுசரணையில். இரத்ததான முகாம் நேற்று முன்தினம், காலை -09 மணி முதல், இளவாலை கலைமகள் படிப்பகத்தில், நடைபெற்றது.

மேற்படி இரத்ததான முகாமில், யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த, இளைஞர்கள், யுவதிகள், இராணுவத்தினர் உட்பட பலரும், ஆர்வத்துடன் கலந்து கொண்டு, குருதிக் கொடை வழங்கினர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின், வைத்தியர் ரி.ஜெயதர்சன், இரத்த வங்கிப் பிரிவின் பொறுப்புத் தாதிய உத்தியோகத்தர் கே.சிவநேசன் உள்ளிட்ட, வைத்தியசாலையின் இரத்தவங்கிப் பிரிவினர் நேரடியாக கலந்து கொண்டு, குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

(18)

## விவசாயிகளுக்கான உபகரணங்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஐவர் கைது



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட முத்தையன்கட்டு விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்ட விவசாய உற்பத்தி உபகரணங்கள், களவாபடப்பட்ட சம்பவம் தொடர்பில் 5 பேரை ஒட்டுசுட்டான் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

காலநிலைக்கு சீரான விவசாயத் திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டுப் பிரதேசத்தில், விவசாய நிலங்கள் உள்வாங்கப்பட்டு விவசாயிகளுக்கான ஊக்குவிப்புக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், இந்த திட்டத்தின் கீழ் முத்துஐயன்கட்டு விவசாயிகளுக்கான புல்லுவெட்டும் மிசின்கள், சவல்கள், நீர்தூவும் கான்கள் உள்ளிட்ட மூன்று இலட்சம் பெறுமதியான பொருட்கள் என்பன, விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, கடந்த வாரம் கொண்டுவரப்பட்டு, விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் இறக்கிவைக்கப்பட்டன.

இவை, விவசாயிகளுக்கு வழங்கப்படாத நிலையில் கடந்த 30 ஆம் திகதி வைக்கப்பட்ட அறை உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில், உடனடியாக ஒட்டுசுட்டான் பொலீஸ் நிலைய குற்றப்பிரிவு அதிகாரி தலைமையிலான குழுவினர், விரைந்து செயற்பட்டு, சந்தேகத்தின் பேரில், 5 பேரை கைது செய்துள்ளார்கள். முத்து ஐயன் கட்டுப் பிரதேசத்தினைச் சேர்ந்த, முத்து விநாயகபுரம்,தட்டையமலை, ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைதானவர்களில், மூவரிடமிருந்து ,களவாடப்பட்ட மூன்று புல்லுவெட்டும் இயந்திரங்கள் மீட்கப்பட்டதுடன், ஏனைய இரண்டும் மீட்கப்படாத நிலையில்,இவர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைப்பதற்கு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன். இது குறித்த விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

(15)

## துப்பாக்கியுடன் ரவைகளும் மீட்பு

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணையில், இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் புதைத்து வைக்கப்பட்டதாக கருதப்படும் ஏ.கே. துப்பாக்கியுடன், அதற்கான மகசின்கள் 4 மற்றும் துப்பாக்கி ரவைகள் 210 என்பனவும் பாதுகாப்புத் தரப்பினரால், மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை வேளை, இவை மீட்கப்பட்டு, முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவற்றை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் நடவடிக்கையில், முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள். (15)

## மேய்ச்சலுக்காகச் சென்ற ஆறு ஆடுகள் மாயம்; பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

மேய்ச்சலுக்காக விடப்பட்ட 6 ஆடுகள், ஒரே சமயத்தில் களவாடப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதியில், தனது 6 ஆடுகளையும், மேய்ச்சலுக்காக வெளியில் அனுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் வரை, 6 ஆடுகளும் திரும்பி வராத நிலையில், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில், முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரே சமயத்தில் 6 ஆடுகளும் களவாடப்பட்டுள்ளதனால், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக யாருக்காவது தகவல் தெரிந்தால், வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தெரியப்படுத்துமாறும், அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(21)

## மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் நிகழ்வு

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் 'மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 09' நிகழ்வின் 54ஆவது கதையாடல் நிகழ்வு, இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு, புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நாடகப்பணிகளும் கூத்துப் புத்தாக்கமும் எனும் விடயப் பொருளில் கதையாடவுள்ளார். நிறைவுரையினை, புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி அருள்குமரன் வழங்கவிருக்கிறார்.

ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261 மற்றும் கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு, புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## யாழில் வேலை வாய்ப்பு முகாம்

யாழ்பாடி விருந்தகத்தில் DEWMAS நிறுவனத்தினால், வேலைவாய்ப்பு முகாமொன்று நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இதில், 10ற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களிலுள்ள வேலைவாய்ப்பு வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்களை தெரிவு செய்யவுள்ளனர்.நாளைய தினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை இடம்பெறவுள்ள மேற்படி வேலை வாய்ப்பு முகாமில், 30ற்கும் மேற்பட்ட பல்வேறு விதமான வேலைவாய்ப்புகளிற்கு நேர்முகத் தேர்வு இடம்பெறும். இந்த வேலைவாய்ப்பு முகாமில் பங்குபற்றுவதற்கு அனுமதி இலவசம் என்பதுடன், மேலதிக விபரங்களை www.dewmas-web.com எனும் இணையத்தள முகவரி ஊடாகப் பார்வையிட முடியுமெனவும், தெரிவிக்கப்படுகின்றது.

## ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு இராணுவத்தினரால் உபகரணங்கள் வழங்கி வைப்பு



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு இராணுவத்தினரால், சுகாதார மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பன, வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தினால், இலங்கை ஹோட்டல் பட்டதாரிகளின் சங்க உறுப்பினர்களின் அனுசரணையுடன், ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு, கைத்தறி மற்றும் சுகாதார அத்தியாவசிய உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சய வனசிங்க சார்பில், 64 ஆவது படைப் பிரிவின் தளபதி, மேஜர் ஜெனரல் உபுல் வீரகோன் வைத்தியசாலைக்குச் சென்று, மெத்தைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், துடைப்பான் ஆடைகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

(55)

## வெள்ளத்தினால் வீடு அழிவடைந்த குடும்பத்திற்கு புதிய கல்வீடு

கோண்டாவில் பிரதேசத்தில் அண்மைய வெள்ளத்தினால் பாதிப்புற்று இடிந்து விழுந்த மண் வீடொன்றை நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், வீட்டின் உரிமையாளர்களுக்கு வாக்குறுதியளித்ததன் படி, கல்வீடொன்றை நிர்மாணித்து வருகிறார். வர்த்தகர் சுராங்கனியின் நிதியுதவியில், புதிய வீட்டின் கட்டுமானம் நடைபெற்று வருகின்றது. நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததும், இந்த வீடானது உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவிருக்கின்றது.

## பயங்கரவாதத்தை ...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அணுகுவதில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பலர் எதிர்கொள்ளும் சவால், வழக்கறிஞர்களை அணுகுவதற்கான நிர்வாகக் கட்டுப்பாடுகள் மற்றும் திறமையான ஆலோசகர்களை தக்கவைத்துக்கொள்வதற்கு நிதி ஆதாரங்கள் இல்லாதது ஆகும்.

அதே போன்று, மனித உரிமை ஆணைக்குழுச் சட்டம் ஏற்கனவே சுதந்திரம் பறிக்கப்பட்ட ஆட்களின் நலனைக் கண்காணிக்க ஆணைக்குழுவிற்கு கட்டளையிடுகிறது மற்றும் எந்தத் தடுப்புக் காவலின் இடத்திற்கும் முன்னறிவிப்பின்றி அணுகுவதற்கும் அதிகாரம் அளிக்கிறது. எவ்வாறாயினும், 2020 அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தைத் தொடர்ந்து, ஆணைக்குழுவின் அதிகாரிகளை நியமிப்பது ஜனாதிபதியின் விருப்பப்படி இருப்பதால்,இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இனி சட்டப்பூர்வமாக சுயாதீனமான அமைப்பாக இருக்காது. இது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் நிறுவனம் மீதான பொது நம்பிக்கையை மோசமாக பாதிக்கிறது.பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 13 ஆல் நிறுவப்பட்ட ஆலோசனை சபை , கடந்த காலத்தில் நாம் சுட்டிக்காட்டியபடி, அதன் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவதால் சுயாதீனமாக இல்லாத பாதுகாப்பு போதாமலுள்ள பொறிமுறையாகும். மேலும், காவலில் வைக்கப்பட்டுள்ள நபர்களின் பிரதிநிதித்துவங்களை சபை எவ்வாறு கையாள்கிறது என்பதற்கான விதிகளை உருவாக்க பாதுகாப்பு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது. எனவே நிறைவேற்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிராக இது ஒரு பாதுகாப்பாக செயற்படாது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை விடுவிப்பது குறித்து முடிவெடுக்க/பரிந்துரைக்க நிறுவப்பட்ட எந்தவொரு நீதித்துறை அல்லாத பொறிமுறையும் சுயாதீனமாக இருக்க வேண்டும் மற்றும் சட்டமாஅதிபர் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் அந்த தீர்மானங்களை வீட்டோ செய்வதாக இருக்கக்கூடாது.

### முன்னோக்கிய வழி

எஸ். எல். சி. சி. உடன் அரசாங்கம் பகிர்ந்துகொண்ட முன்மொழிவுகள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் அடிப்படை குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தவறிவிட்டன. அதற்குப் பதிலாக, அவை ஏற்கனவே இருக்கும் மாற்றங்களை முன்மொழிகின்றன. ஆனால் அவை பெரும்பாலும் மீறலில் அவதானிக்கப்படுகின்றன.மேற்கூறிய குழுக்களின் செயற் பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் இல்லை என்பதையும் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான பிரச்சினைகளில் பணியாற்றிவரும் சிவில் சமூக உறுப்பினர்கள் அல்லது சட்டத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுடன் எந்த ஆலோசனையும் மேற்கொள்ளப்படாமல் பரிந்துரைகள் உருவாக்கப்பட்டன என்பதையும் ஆழ்ந்த கவலையுடன் குறிப்பிடுகிறோம். இந்தக் கட்டத்தில் இருந்து மறுசீரமைப்பு செயற்பாட்டில் அதிகளவிலான வெளிப்படைத்தன்மைக்கு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். மேலும் ஆலோசனைக்கான செயல்முறை மற்றும் மறுசீரமைப்புக்கான முன்மொழியப்பட்ட காலக்கெடுவை பொதுமக்களுக்கு தெரிவிக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறோம்.

ஏற்கனவே பாகுபாடு காட்டப்பட்ட மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்கு பாதுகாப்பின்மையை உருவாக்குவதன் மூலம் தேசிய பாதுகாப்பை அடைய முடியாது என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். மேலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் பொதுப் பாதுகாப்பு சட்டக் கட்டமைப்பு இலங்கையில் நடைமுறையில் உள்ளது மற்றும் அரச நிறுவனங்களின் வரலாற்று ரீதியான அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றின் அடிப்படையிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக பரிசீலிக்கப்பட வேண்டும். இந்த நிறுவனங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படக்கூடாது.முன்னோக்கிச் செல்லும் வழியாக , உடல் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு உரிய அங்கீகாரத்தை அளிக்க வேண்டும். நிர்வாகியால் உடல் சுதந்திரம் பறிக்கப்படுவது கடைசி முயற்சியாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் புறநிலை காரணிகள், அத்தகைய அடிப்படையின் நீதித்துறை மேற்பார்வை, சட்ட உதவி, உடனடி சோதனைகள் அல்லது விடுதலை உள்ளிட்ட சட்டப் பிரதிநிதித்துவத்திற்கான உடனடி மற்றும் இலவச அணுகல் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் போதுமான அடிப்படைத்தன்மை, தன்னிச்சையான தடுப்புக் காவலுக்கு இழப்பீடு பெறுவதற்கான நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை என்பவை கண்டிப்பாக தேவைப்படுகிறது .சுதந்திரத்தை தன்னிச்சையாகப் பறிப்பதைத் தடைசெய்வது வழக்கமான சர்வதேச சட்ட அந்தஸ்தைப் பெற்றுள்ளது மற்றும் இலங்கை தனது பிரஜைகளைப் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டிருக்கும் ஒதுக்கிவைத்துவிடமுடியாத சர்வதேச சட்ட விதிமுறையை உருவாக்குகிறது. தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியவற்றிற்கு இடையே அரசாங்கம் அடைய விரும்பும் சமநிலையை, மோதல் மற்றும் வன்முறைக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் மட்டுமே அடைய முடியும். தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் சிவில் உரிமைகளை மேலும் குறைக்க முயற்சிப்பது அனைத்து சமூகங்களின் பாதுகாப்பின்மையை அதிகப்படுத்துவதுடன் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தையும் குழி தோண்டிப் புதைக்கும்.

இந்த அறிக்கையில் கையொப்பமிட்டவர்கள்– எஸ்.அன்னலட்சுமி,பிஸ்லியா பூட்டோ,எஸ்.சி.சி. இளங்கோவன், வழக்கறிஞர் மற்றும் மேம்பாட்டுஆலோசகர் பிலிப் திசாநாயக்க,நான்.ஃபாயிஸ்,பிரிட்டோ பெர்னாண்டோ,நிமல்கா பெர்னாண்டோ,ருக்கி பெர்னாண்டோ,அனீசா பிர்தௌஸ்,அமரசிங்கம் கஜேந்திரன்,டி.கங்கேஸ்வரி,கே.ஜினோகினி ரனிதா ஞானராஜா, ஏ.ஏ.எல்.பி.கௌதமன்,எஸ்.ஹயக்கிரிவன், இயக்குனர் தலம்,வி. இந்திராணி,நூருல் இஸ்மியா வாசுகி ஜெய்சங்கர்,கலாநிதி சகுந்தலா கதிர்காமர்,எஸ்.கமலகாந்தன் – சமூக ஆர்வலர்,மகாலக்ஷ்மி குருஷாந்தன்,கண்டுமணி லவகுசராசா, மனித உரிமை செயற்பாட்டாளர்,ஜென்சிலா மஜீட்ஹாரி முகமது, மனித உரிமை ஆர்வலர்,ஜுவைரியா மொஹிதீன் ஜாபிர், ராசி முஹம்மது, தலைவர், குரல்கள் இயக்கம்,பி.முத்துலிங்கம் தங்கராசா பிரசாந்த ன்,டோரின் ரஜனி,மைத்ரேயி ராஜசிங்கம், நிர்வாக இயக்குநர், விழுது,ஏ.ஆர்.ஏ. ரமீஸ்வி. ரஞ்சனா,அனுராதா ராஜரெட்ணம்,கே. எஸ். ரட்ணவேல் ,யாமினி ரவீந்திரன், ஏ.ஏ.எல்.குமுதினி சாமுவேல் துரைநாயகம் சஞ்சீவன்,ஷ்ரீன் சரூர்,அம்பிகா சற் குணநாதன்,அருட்தந்தை எஸ். டி. பி. செல்வன்,எஸ்.செல்வராணி வாணி சைமன்,பி.என்.சிங்கம்,உஷா சிவகுமார்,என்.சுமந்தி,வாணி சுதா,எர்மிசா டெகல்,எஸ்.திலீபன் –சமூக ஆர்வலர்,பி .வசந்தகௌரி, வணபிதா யோகேஸ்வரன்,கொள்கை ஆராய்ச்சிக்கான அடயாளம் மையம் சிறுபான்மையினருக்கான கூட்டணி,மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டு நிலையம், நீதி மற்றும் மாற்றத்திற்கான நிலையம்,கிழக்கு சமூக மேம்பாட்டு அறக்கட்டளை,காணாமல் போனவர்களின் குடும்பங்கள் பன்மைத்துவ ஜனநாயகத்திற்கான மன்றம்,சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளை,மன்னார் மகளிர் அபிவிருத்தி சம்மேளனம்,கிராம வளர்ச்சி அறக்கட்டளை,தமிழ் சிவில் சமூக மன்றம்,விழுது பெண்கள் நடவடிக்கை நெட்வொர்க்.

# 35,000 கண்களை தானம் செய்தது இலங்கை ஆனால் நாங்கள் பார்வையை இழந்துவிட்டோம்

## -பாகிஸ்தானின் பிரபல கண்மருத்துவர் நியாஜ் புரோகி கவலை-



இலங்கை எங்களிற்கு 35,000 கண்களை தானம் செய்தது ஆனால் நாங்கள் பார்வையை இழந்துவிட்டோம் என பாகிஸ்தானின் தலைசிறந்த கண்மருத்துவர் நியாஜ் புரோகி கவலை வெளியிட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை இலங்கை பிரஜை கும்பலொன்றினால் படுகொலை செய்யப்பட்ட தருணம் முதல் நான் நாட்டின் ஏனைய பலரை போல துயரத்தில் சிக்குண்டுள்ளேன் என குறிப்பிட்டுள்ள அவர், அவமானம் தாங்காமல் வெட்கி தலைகுனிகின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள இலங்கை கண்தான அமைப்பின் முக்கிய உறுப்பினரான அவர், அந்த அமைப்பிற்கு எழுதியுள்ள கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

சாமா டிஜிட்டலிற்கு கருத்து தெரிவித்துள்ள அவர்,

இலங்கை 83,200 விழி வெண் படலங்களை உலகின் பல நாடுகளிற்கு தானம் செய்துள்ளது.இவற்றில் பெருமளவானவற்றை பாகிஸ்தானே பெற்றுள்ளது. 40 வீதத்தினை பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், 1967 முதல் கண்தான சங்கம் பாகிஸ்தானிற்கு 35,000 விழி வெண்படலங்களை தானம் செய்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எங்களிற்கு கண்களை தானம் செய்தது நாங்கள் பார்வையை இழந்துவிட்டோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## -பாகிஸ்தானில் இலங்கையர் கொலை-

# 235 பேர் கைது; 900 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

பாகிஸ்தானில் இலங்கையரான பிரியந்த குமார கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் இதுவரை 235 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 900 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சியால் கோட் பொலிஸார் 900 சந்தேகத்திற்குரிய சந்தேக நபர்களை கைது செய்வதற்காக நகரம், அருகிலுள்ள கிராமங்கள் உள்ளிட்ட பல இடங்களில் சோதனை நடத்தி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட 235 பேரில் இரண்டு முக்கிய சந்தேக நபர்களான மொஹமட் தல்ஹா மற்றும் ஃபர்ஹான் இத்ரீஸ் ஆகியோர் அடங்குவர்.

பிரியந்த குமாராவின் பிரேத பரிசோதனை சியால் கோட்டின் அராமா இகுபால் போதனா வைத்தியசாலையில் நிறைவடைந்துள்ளது.

பின்னர் பிரியந்த குமாராவின் உடல் 1122 ஆம்பியூலன்ஸ் மூலம் பலத்த பாதுகாப்புடன் லாகூர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக துணை தலைமை அமைச்சரவை செயலாளர் சியால்கோட் தாஹிர் ஃபரூக் தெரிவித்தார்.

சட்ட ரீதியான நடைமுறைகள் முடிந்த பின்னர் பிரியந்த குமாராவின் சடலத்தை கொழும்புக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பிரியந்த குமாராவின் மனைவி நிரோஷி தசநாயக்க, கொலை செய்யப்பட்ட தனது கணவருக்கு நீதி வழங்குமாறு பாகிஸ்தான் மற்றும் இலங்கைத் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது இவ்வாறிருக்க பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் மற்றும் பிரதம அலுவலக அதிகாரிகள் இந்த வழக்கை தனிப்பட்ட முறையில் கண்காணித்து வருகின்றனர்,

மேலும் அட்டூழியங்களில் ஈடுபட்ட அனைவருக்கும் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என்று பஞ்சாப் மாநில காவல்துறைத் தலைவர் (ஐ.ஜி.பி) உடனான ஒரு கூட்டு செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு நகர் பகுதியில் 7 உணவகங்களுக்கு அபராதம்

மட்டக்களப்பு நகர் பகுதியில் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற தவறிய பிரபலமான மூன்று உணவகங்கள் உட்பட 7 உணவங்களை தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 70 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். நிஸ்வான் உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

மட்டக்களப்பு சுகாதார அதிகாரி பிரிவிலுள்ள வெட்டுக்காடு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நகர் பகுதியிலுள்ள உணவகங்களை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது செயற்பட்ட பிரபல்யமான 3 உணவகங்கள் உட்பட 7 உணவங்களுக்கு எதிராக உணவு சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்தனர்.

இதனையடுத்து வழக்கை விசாரணைக்கு எடுத்தபோது தலா ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் 70 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு நீதிவான் ஏ.சி.எம். நிஸ்வான் உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.


**Vacancy**

Receptionist, Cashier,Data Entry Operator, Store Keeper, Accounts Clerk, Computer Operator, Pharmacy Staffs, CCTV Technical, Airtecketing Staffs, Delivery boy (Part time)

0771433368



**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**

தாயின் மடியில்... 17 * 08 * 1946



சிவன் அடியில்... 02 * 12 * 2016

அமரர்

**திருமதி சறோஜினிதேவி அருணகிரிநாதன்**

(ஓய்வுநிலை ஆசிரியர்)

திதி : 06.12.2021

அன்பின் பிறப்பிடமே அம்மா!
ஆண்டுகள் ஐந்து ஓடினதோ அம்மா!
கருவினில் எமைச் சுமந்தீர்
கருத்தோடு எமை வளர்த்தீர்
காணக் கண் துடிக்கின்றோம்
கண்மணிக்குள் உனை வைத்து
கடமைகளைச் செய்கின்றோம்
கண்டுகொள்வோம் என்று ஒருநாள்
கனவோடு வாழ்கின்றோம்.

இடிப்பான்
சரவணை கிழக்கு,
வேலணை.

குடும்பத்தினர்


# கிராம மக்களின் கண்ணீருக்கு மத்தியில் இரு சிறுவர்களின் உடல்களும் நல்லடக்கம்

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவில் உள்ள வாழைத்தோட்டம் கடலில் மூழ்கி வெள்ளிக்கிழமை மாலை இரண்டு சிறுவர்கள் உயிரிழந்தனர்.அச்சிறுவர்களது சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வாழைத்தோட்டம் இந்து மயானத்தில் கிராம மக்களின் கண்ணீருக்கு மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டன

பாடசாலை விட்டுச் சென்ற நான்கு சிறுவர்கள் வாழைத்தோட்டம் கடலில் பந்துகளை கொண்டு விளையாடி குளித்துள்ளனர். இதில் இரண்டு சிறுவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.இதன்போது உயிர் தப்பிய மற்றைய இரண்டு சிறுவர்கள் பிரதேச மக்களிடம் சம்பவம் குறித்து தெரிவித்ததையடுத்து கடலில் தேடியபோது இரண்டு சிறுவர்களும் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் கல்லடி மலை நீழியம்மன் வித்தியாலயத்தில் கல்வி கற்பவர்களாவர்.இதில் தரம் 9 இல் கல்வி கற்கும் யோகேந்திர ராசா லக்சன் வயது (14) ,தரம்6 இல் கல்வி கற்கும் டினேஸ்காந்த் நிம்ரோசன் வயது (12) ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது .

# நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை தவிடுபொடியாக்கிய அரசாங்கம்

## -திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி குற்றச்சாட்டு-

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரம் இருக்கின்றது. எனவே, அதற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெறுவது கண்டிக்கத்தக்கதுடன், இவ்வாறான நடவடிக்கைகள் ஜனநாயக ஆட்சிக்கு விரோதமான செயற்பாடுகளாகுமென, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, தமது கருத்துகளை, நிலைப்பாடுகளை சுதந்திரமாக நாடாளுமன்றத்துக்குள் வெளியிடும் உரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டும். அந்த உரிமையைப் பயன்படுத்தி, கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை தாக்க முற்படுவது, அவருக்கு அச்சுறுத்தல் விடுப்பது என்பன, ஏற்புடைய விடயமாக அமையாது. அவற்றை கண்டிக்க வேண்டும். அதேபோல, நாடாளுமன்றத்துக்குள் கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற சம்பவங்கள், ஜனநாயக ஆட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

எதிரணி எம்.பிக்களுக்கு எதிரான அச்சுறுத்தலை ஏற்கமுடியாது. எனவேதான், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை சபை அமர்வுகளைப் புறக்கணிப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.அதற்கான நடவடிக்கை எவ்வாறு இடம்பெறும் என்பதை, கட்சியின் நாடாளுமன்றக்குழு தீர்மானிக்கும்.

குறிப்பாக நாடாளுமன்றம் தொடர்பில், மக்களுக்கு தற்போது நன்மதிப்பு இல்லை. எனவே, நாடாளுமன்றத்திற்குள்; இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை தடுத்து, மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு, சபாநாயகருக்கும், கட்சித் தலைவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்றது.


# Invitation for Bids (IFB)

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Northern Provincial Council Provincial Department of Agriculture, Northern Province**
**Procurement of Goods**

1. The Chairman, Procurement Committee on behalf of Provincial Department of Agriculture, Northern Province now invites sealed bids from eligible and qualified bidders for the items listed below.

| S.No | Bid Number | Item | Bid Security Amount | Bid Security Validity Period | Non-Refundable Fee Rs |
|---|---|---|---|---|---|
| 1 | NP/25/03/10/Electricpump/Saubhagya/2021/07-01 | Supply of Electric Water Pump | 253,000/= | 24th April 2022 | 5,000/= |
| 2 | NP/25/03/10/Waterpump/Saubhagya/2021/06-01 | Supply of 3 HP Engine Driven Agriculture Water pump | 63,000/= | 24th April 2022 | 2,000/= |

1. Bidders shall be a Sri Lankan citizen or private entity who may have a valid business Registration / company registration and valid registration certificate issued by respective Authority for the supply of respective Items.
2. Bidder should have in the relevant field in Sri Lanka as required in the bidding documents.
4. A complete set of bid documents in English language could be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a **Nonrefundable** fee on working days from **06.12.2021 to 24.12.2021** during office hours from 09:00am to 15:00pm on working days. The method of payment will be by cash.
5. Interested eligible bidders may obtain further information from **Finance Branch, Provincial Department of Agriculture, Northern Province, No.68, Crossette Lane, Chundikuli, Jaffna.**
**T/PNo.021 221 9027, Fax No. 021 221 9027**
6. Additional details are provided in the Bidding Data Sheet.
7. Dead line for the submission of bids shall be on **27th December 2021 at 10.00 hrs**
8. Each Sealed Bids must be dispatched either by registered post, Courier or by hand addressed to Chairman, Department Procurement Committee, Provincial Department of Agriculture, Northern Province, No.68, Crossette Lane, Chundikuli, Jaffna on or before **27th December 2021 at 10.00 hrs.** Bid number must be written on the top of the envelop. Late bids will be rejected. Bids will be opened immediately after closing time. Bidders or their authorized representatives may be present at the time of opening bids.
9. All bids must be accompanied by a "bid security" which mentioned in the tender document. Any bid not accompanied by an acceptable bid security will be rejected.
10. The Chairman reserves the right to accept or reject or partially accept any bid and to annul the bidding process and reject all bids at any time without thereby incurring any liability to the bidders.
11. Pre bid meeting will be conducted on **17.12.2021 at 10.30 a.m**

**The Chairman,**
**Department Procurement Committee,**
**Provincial Department of Agriculture,**
**Northern Province,**
**No.68, Crossette Lane, Chundikuli, Jaffna.**

-வான்கடே டெஸ்ட் கிரிக்கெட்-

# 62 ஓட்டத்தில் சுருண்டது நியூஸி. இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் வான்கடே மைதானத்தில் தொடங்கியது.

முதல்நாள் ஆட்ட முடிவில் இந்தியா 4 விக்கெட் இழப்பிற்கு 221 ஓட்டங்களை எடுத்திருந்தது. மயங்க் அகர்வால் 120 ஓட்டங்களுடனும், சகா 25 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இரண்டாவது நாளான நேற்று முன்தினம் காலை ஆட்டம் தொடர்ந்த நிலையில் மேலும் 2 ஓட்டங்கள் சேர்த்த சகா ஆட்டமிழந்தார். அடுத்து களம் இறங்கிய ரவிச்சந்திரன் அஸ்வின் ஓட்டம் எதுவும் எடுக்காமல் அஜாஸ் படேல் பந்துவீச்சிற்கு விக்கெட்டை பறிகொடுத்தார். பின்னர் வந்த அக்ஸர் படேல் மயங்க் அகர்வால் உடன் ஜோடி சேர்ந்து ரன் குவிப்பில் ஈடுபட்டார்.

அரைசதம் அடித்த அக்ஸர், 52 ஓட்டங்களை எடுத்திருந்த போது ஆட்டமிழந்தார். எனினும் தொடர்ந்து விளையாடிய மயங்க் அகர்வால் 150 ஓட்டங்களை குவித்த நிலையில் அஜாஸ் படேல் பந்துவீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார். பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் 325 ஓட்டங்களுக்கு முடிவுக்கு வந்தது.

இந்தப் போட்டியில் மும்பையை பூர்வீகமாக கொண்ட நியூசிலாந்து வீரர் அஜாஸ் பட்டேல் 47.5 ஓவர்கள் வீசி இந்திய அணியின் 10 விக்கெட்களையும் கைப்பற்றி புதிய சாதனை படைத்தார்.

இதையடுத்து முதல் இன்னிங்ஸை விளையாடிய நியூஸிலாந்து வீரர்கள் ஆரம்பம் முதலே இந்திய வீரர்களின் சுழல் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறினர். 28.1 ஓவர்கள் தாக்குப்பிடித்த நியூஸிலாந்து அணி 62 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்தியா தரப்பில் அஸ்வின் 4 விக்கெட்களை வீழ்த்தினார். சிராஜ் 3 விக்கெட்டுகளும், அக்ஸர் படேல் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

ஜெயந்த் யாதவ் ஒரு விக்கெட் எடுத்தார். இதையடுத்து நியூஸிலாந்து பாலோ ஆன் ஆனது. ஆனாலும், பாலோ ஆன் கொடுக்காத இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடியது.

நேற்று முன்தினம் ஆட்ட முடிவில் இந்தியா விக்கெட் இழப்பின்றி 69 ஓட்டங்கள் சேர்த்திருந்தது.

தொடர்ந்து நேற்று 3 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. மயங்க் அகர்வால் சிறப்பாக விளையாடி அரைசதம் அடித்தார்.

தொடர்ந்து விளையாடிய அவர் 62 ஓட்டங்களில்; வெளியேறினார். புஜாரா 47, ப்மான் கில் 47, விராட் கோலி 36 ஓட்டங்களும் சேர்த்தனர். அக்சார் பட்டேல் ஆட்டமிழக்காமல் 26 பந்தில் 41 ஓட்டங்கள் விளாச, இந்தியா 7 விக்கெட் இழப்பிற்கு 276 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது 2 ஆவது இன்னிங்சை டிக்ளேர் செய்தது.

இதனால் இந்தியா மொத்தமாக 539 ஓட்டங்கள் பெற்றது.

நியூசிலாந்து 540 ஓட்ங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களம் இறங்கியுள்ளது.

நேற்றையதினம் நியூசிலாந்து 140 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டை இழந்துள்ளது. இன்னும் 400 ஓட்டங்கள் அடிக்க வேண்டிய நிலையில் நியூசிலாந்திடம் 5 விக்கெட்டுக்கள் உள்ளன. இன்றையதினம் இந்தியப் பந்துவீச்சாளர்கள் நியூசிலாந்தை வீழ்த்தி வெற்றிபெறும் வாய்ப்பு காணப்படுகின்றது. 2 ஆவது இன்னிங்சில் நியூசிலாந்து வீரர் அஜாஸ் பட்டேல் 4 விக்கெட்டும், ரவீந்திரா 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

# வடக்கு மாகாண விளையாட்டு யாழ். மாவட்ட அணி சம்பியன்



யாழ்.மாவட்ட பெண்கள் அணி தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தப்படும் வடமாகாண மாவட்ட அணிகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஆட்டத்தில் ஏக ஆதிக்கம் செலுத்திய யாழ் மாவட்ட பெண்கள் அணி 43:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். (21)


## Hiring of Vehicles

Below Mention Vehicles are need for one of the reputed Road Construction Company in Jaffna.

1) Van - KDH
2) Van - Hiace
3) Bolero
4) Crew cab

Contact Details
Kavindu - 077 - 3958922
Thaneeshan - 077 - 1188657


# வடக்கு மாகாண விளையாட்டு வவுனியா அணி வெண்கலம்



பரபரப்பான ஆட்டத்தில் வவுனியா மாவட்ட பெண்கள் அணி 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

வடமாகாண மாவட்ட அணிகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியின் 3 ஆம் இடத்திற்கான ஆட்டம் நேற்று முன்தினம் மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. இரு அணிகளின் இறுதி வரை வெற்றிக்காக போராடினர்.

இடைவேளைக்கு முன்னரான இரு கால்பகுதி ஆட்டங்களிலும் கிளிநொச்சி மாவட்ட அணி 8:7, 18:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்தனர். அடுத்த மூன்றாவது கால்பகுதி ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணி பலத்த போராட்டத்தில் 27:27 என ஆட்டத்தை சமநிலைப்படுத்தினர். நான்காவது கால் பகுதி ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றிக்காக போராடினர். இதில் வவுனியா மாவட்ட அணி ஆட்ட நேர முடிவில் 37:35 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினர். (21)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்

மண்ணில்... 28 * 08 * 1941



விண்ணில்... 08 * 11 * 2021

அமரர்
Dr. வடிவேலு கயிலாயநாதன்

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், மோதரை கொழும்பு - 15ஐ வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தின் குலதெய்வம் 08.11.2021 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு தொலைபேசியூடாகவும், நேரடியாகவும், ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 06.12.2021 திங்கட்கிழமை முகத்துவாரம் கருமாரி அம்மன் மடத்தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வு 08.12.2021 புதன்கிழமை மதியம் 11 மணியளவில் 11/1, Mosque Lane, மோதரை, கொழும்பு - 15 என்ற முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருவதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

தகவல் - குடும்பத்தினர்
11/1, Mosque Lane, மோதரை,
கொழும்பு - 15

011-2546307
0776157592






## நம்பிக்கையான 90 ஆண்டுகள்

90 ஆண்டுகாலமாக எமது வாடிக்கையாளர்களின் இதயங்களில் அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்தி இந்த பெருமைக்குரிய பயணத்தில் எம்மோடு கைக்கோர்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

உன்னதமான, நம்பிக்கையான சேவைகளை எதிர்காலத்திலும் உங்களுக்கு வழங்க நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

රාජ්‍ය උකස් හා ආයෝජන බැංකුව
அரச ஈட்டு முதலீட்டு வங்கி
State Mortgage & Investment Bank

1922
www.smib.lk

269, காலி வீதி, கொழும்பு 03. | மின்னஞ்சல்: info@smib.lk

ICRA (SL) BBB+ | அரச அடமானம் மற்றும் முதலீட்டு வங்கி என்பது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையில் உரிமம் பெற்ற சிறப்பு வங்கியாகும்.


இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அரசாங்கம் அபிவிருத்திச் செயற்பாடுகளில் வட, கிழக்கிற்கு அநீதி இழைக்கவில்லை

## -இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா-



பா.கிருபாகரன்

அபிவிருத்திச் செயற்பாடுகளில் வடக்கு கிழக்கிற்கு அநீதி இழைக்கப்படவில்லை என நெடுஞ்சசாலைகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு வழங்குவது தொடர்பில் சுமந்திரன் எம்.பி கருத்துத் தெரிவித்தார்.அது தொடர்பில் எமக்குப் பிரச்சினை கிடையாது. வடக்கு கிழக்கு பகுதிகள் தொடர்பில் முறைகேடு நடப்பதாக அவர் தெரிவித்தார். களனி பாலம் மற்றும் கிண்ணியா பலம் பற்றி பேசினார். களனி பாலம் நீண்டகாலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு கிழக்கிற்கு அநீதி நடக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் பாரிய அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதி நடந்தது. யுத்தம் காரணமாக அப்பகுதி அபிவிருத்தி தடைப்பட்டிருந்தது. அதனை நாம் ஏற்கிறோம். எமது அமைச்சு வடக்கு கிழக்கிற்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளோம். நீங்கள் உதவி செய்து ஆட்சிக்கு கொண்டு வந்த அரசு கிண்ணியா பாலம் அமைக்க அடிக்கல் நாட்டிய போதும் பாலம் நிர்மாணிக்கப் படவில்லை. அதற்கு கடந்த அரசே பொறுப்பு கூற வேண்டும். தௌபீக் எம்.பியின் கோரிக்கை படி பாலம் அமைக்க அடிக்கல் நாட்டினோம். பாலப் பாதையை நகரசபையே வழங்கியது.

வடக்கில் 3000 கிலோமீட்டர் நீள பாதை நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.எமது காலத்தில் வடக்கு கிழக்கிற்கோ வேறு பகுதிக்கோ நாம் அநீதி இழைக்கவில்லை.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசினாலும் அனைத்திற்கும் அரசியலை திணிக்காதீர்கள். எமது அமைச்சு பற்றி தவறான கருத்தை முன்வைக்காதீர்கள்.

## பாகிஸ்தானில் கொலைசெய்யப்பட்டவரது சடலம் இன்று எடுத்து வரப்படுகின்றது



பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையரது சடலம் இன்று திங்கட்கிழமை அரச செலவில் இலங்கைக்கு எடுத்துவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டு, எரியூட்டி படுகொலை செய்யப்பட்ட காட்டுமிராண்டித்தனமான சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட எம்.பி.யுமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதேவேளை இவ்விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட இலங்கை அரசும் முழுமையாக போராட வேண்டுமென அட்டனில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போது தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட எம்.பி.யுமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நூறுபேர் வரை கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நீதி நிலைநாட்டப்படும் என பாகிஸ்தான் பிரதமர் அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கது. அதேபோல இனியும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் கொரோனா தொற்று அதிகரிப்பு; மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

கிழக்கு மாகாணத்தில் நாளுக்கு நாள் கொரோனா தொற்று அதிகரித்து வருவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் குறைவடைந்திருந்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நவம்பர் மாதத்தில் சிறிய அளவில் அதிகரித்துள்ளதை காணமுடிகின்றது. அதாவது, ஒக்டோபர் மாதத்தில் சராசரியாக கிழமைக்கு 600 தொடக்கம் 650க்கு இடைப்பட்ட வகையில் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வந்தது. இது நவம்பர் இறுதி பகுதியில் கிழமைக்கு 1000 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

அம்பாறை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.இதேவேளை மாதாந்தம் செய்யப்படும் ஆண்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளும் இனங்காணப்படும் நோயாளர்களின் வீதம் அடிப்படையில் ஒப்பிடும்போது செப்டம்பரில் 31வீதமாகவும் ஒக்டோபர் மாதத்தில் 21வீதமாகவும் குறைவடைந்து இருந்தது. இது நவம்பர் மாதத்தில் மீண்டும் 31வீதமாக அதிகரித்து உள்ள நிலையில் டிசம்பர் மாதம் இறுதிக்குள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.:

சர்வதேச நாடுகள் உட்பட எமது நாட்டிலும் ஓமிக்ரோன் வகை கொவிட் வைரஸ் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. இது வேகமாக பரவக்கூடியதாகவும் இதன் தாக்க வேகம், பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அளவு மற்றும் மரணங்களின் வேகம் என்பன தொடர்பில் சரியான கணிப்புகள் இதுவரை கூறப்படவில்லை.

எதிர்வரும் நாட்கள் பண்டிகை காலம் என்பதினால் பொது மக்கள் தமக்கு தேவையான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அடிக்கடி சொல்லப்படுகின்ற முக கவசத்தை சரியாக அணிந்து கொள்வது, சமூக இடைவெளிகளை பேணி,அடிக்கடி கைகளை கழுவிக் தற்பாதுகாப்புகளை எடுத்துக் கொள்வது அவசியமாகும். அத்தோடு அநாவசியமான, பாதுகாப்பற்ற, நெருக்கடியான ஒன்று கூடல்களை தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

## புதையல் தோண்டிய 8 பேருக்கு விளக்கமறியல்



திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் புதையல் தோண்டியதாக சந்தேகத்தின் பேரில் எட்டுப் பேரை பொலிஸார் கைது செய்து மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர் வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்

இவர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சவள் மற்றும் அலவாங்கு என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதி மன்றத்தில் தெரிவித்தனர்.

## மக்கள் மத்தியில் பிரிவினை வடுக்கள் ஏற்பட அந்நிய ஆட்சியே காரணம்

### -என்கிறார் ஞானசார தேரர்-



அந்நிய ஆட்சி காரணமாக இந்நாட்டில் உள்ள மக்கள் மத்தியில் பிரிவினை ஏற்படுத்தப்பட்டது. இதன் வடுக்கள் இன்றும் மக்கள் மத்தியில் காணப்படுவதாக ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் திருகோணமலை மாவட்ட கருத்தறியும் கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் நடைபெற்றது.

ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் முதலாவது செயலமர்வு வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது கிழக்கு மாகாணத்தில் முதலாவது அமர்வு திருகோணமலையில் நடைபெற்றுள்ளது. மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் செயலமர்வுகள் தொடர்ச்சியாக நடைபெற ஏற்பாடாகி உள்ளன .

இப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்களுடைய பிரச்சினைகள், கல்வி, காணி உட்பட பல விடயங்களை இதன்போது மக்கள் தெரிவித்தார்கள் .இதன் மூலம் இப்பிரதேச மக்கள் படும் வேதனைகளை துன்பங்களை அறியக் கூடியதாக உள்ளதாகவும் அவை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட உள்ளதாகவும் இதன்போது ஞானசார தேரர் மேலும் தெரிவித்தார்.

அந்நிய ஆட்சி காரணமாக இந்நாட்டில் உள்ள மக்கள் மத்தியில் பிரிவினை ஏற்படுத்தப்பட்டது. இதன் வடுக்கள் இன்றும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. எனவே அனைத்து மக்களையும் ஒன்றாக ஒரே நாடு ஒரே சட்டம் என்ற அடிப்படையில் இணைத்து செய்வதற்காகவே இந்த செயலணி உருவாக்கப்பட்டது. இன்று நாட்டில் பல சட்டங்கள் இருப்பது மக்களை ஒன்றிணைக்க தடையாகவுள்ளதாகவும் இதன்போது அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் செயலணியின் அங்கத்தவர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட பிரஜைகளும் கலந்து கொண்டனர்.

## சின்னப்பாடுவிலும் தீப்பிடித்த காஸ் அடுப்பு

உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னப்பாடு பகுதியிலுள்ள வீட்டின் சமையல் அறையில் சமையல் எரிவாயுவில் ஏற்பட்ட கசிவினால் காஸ் அடுப்பில் ஏற்பட்ட தீயினால் பொருட்கள் சேதமடைந்துள்ளதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

சமையல் எரிவாயுவின் ரெகுலேட்டர் மேல் பகுதியில் இருந்து வந்த தீயினால் அடுப்பின் கீழ் இருந்த பல பொருட்கள் தீப்பற்றியுள்ளன .வெள்ளிக்கிழமை பகல் சமையல் முடிந்த பிறகு அடுப்பிலிருந்து ரெகுலேட்டரை கழற்றி விட்டு காஸ் சிலிண்டரை வேறாக வைத்த நிலையில் இரவு 8 மணியளவில் காஸ் அடுப்பில் பொருத்தப்பட்டு இருந்த ரெகுலேட்டர் வயரின் ஊடாக தீ வெளியே வந்ததாகவும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் இடம்பெற்ற செயலை கண்டிக்கின்றோம்

## -ஜம்இய்யத்துல் உலமா-

සමස්ථ ලංකා ජම්ඉයියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA

சியால்கோட்டில் தொழிற்சாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டு, அதன் இலங்கையைச் சேர்ந்த முகாமையாளர் மனிதாபிமானமற்ற முறையில் உயிருடன் எரிக்கப்பட்டதை நாங்கள் வன்மையாக கண்டிப்பதோடு, இதுதொடர்பாக நூற்றுக்கும் அதிகமான சந்தேகநபர்களை கைது செய்து அவசரமாக நடவடிக்கைகளை மேற்கொண்ட பாகிஸ்தானின் சட்ட அமுலாக்க அதிகாரிகளை நாம் பாராட்டுகின்றோம். இந்த கொடூரக் கொலைக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சியால்கோட்டில் தொழிற்சாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டு, அதன் இலங்கையைச் சேர்ந்த முகாமையாளர் மனிதாபிமானமற்ற முறையில் உயிருடன் எரிக்கப்பட்டதை நாங்கள் வன்மையாக கண்டிகின்றோம் எங்களின் கவலையையும் பிரார்த்தனைகளையும் மரணித்தவரின் குடும்பத்திற்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

உலகளாவிய மக்கள் அனைவரும் சட்டத்தை மதித்து, சமூகங்களுக்கிடையில் நிலையான சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்கு மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் என்பதும் எமது எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த முன்மாதிரிகளை விட்டுச் செல்ல வேண்டும் என்பதுமே எமது எதிர்பார்ப்பாகும்.

## ரயிலுடன் மோதுண்டதில் குடும்பஸ்தர் பலி



மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்திற்குட்பட்ட திராய்மடு பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ரயிலில் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு திராய்மடு மூன்றாம் குறுக்கு வீதியில் வசிக்கும் செல்லையா அசோக்குமார் எனும் 43 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த பகுதிக்கு வந்த மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடயவியல் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த அதேநேரம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் பணிப்புரைக்கு அமைய களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் உடலை பார்வையிட்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்து,உடலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்

## இந்தியாவுடனான அதிகரித்த காவல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை உயர்ஸ்தானிகர் மொரகொட எதிர்பார்ப்பு



புது டில்லியில் இடம்பெற்ற இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ ராஜ்நாத் சிங்குடனான சந்திப்பின் போது, இந்தியாவுடனான காவல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகளை இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட ஆராய்ந்தார். அவருடன் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கொமடோர் துஷார கருணாதுங்கவும் இணைந்திருந்தார்.

குறிப்பாக, தீ விபத்துக்கள் சரியான நேரத்தில் மற்றும் திறமையான முறையில் கட்டுப்படுத்தப்படாதிருந்திருந்தால், இப் பிராந்தியத்தில் கடல் மாசுபாட்டின் பேரழிவுகரமான நிலைமைகளை விளைவித்திருக்கக் கூடிய, இலங்கையின் கடற்கரையில் இருந்த எம்.டி. நியூ டயமண்ட் மற்றும் எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்களில் ஏற்பட்ட பேரழிவுகரமான தீயைக் கட்டுப்படுத்துவதில் வழங்கப்பட்ட உதவிகளைக் குறிப்பிட்ட உயர்ஸ்தானிகர் மொரகொட, இந்திய பாதுகாப்பு ஸ்தாபனம் பல வருடங்களாக பல துறைகளில் இலங்கைக்கு வழங்கி வரும் ஆதரவுகளுக்காக அமைச்சர் சிங்கிற்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

இலங்கை இராணுவ மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி வாய்ப்புக்களுக்காக அமைச்சர் சிங்கிற்கு நன்றிகளைத் தெரிவித்த உயர்ஸ்தானிகர், எந்த நேரத்திலும் இந்தியாவில் சுமார் 700 இலங்கை இராணுவ மாணவர்கள் பயிற்சி பெற்று வருவதாகக் குறிப்பிட்டார். 2020 இன் ஆரம்ப மாதங்களில் காணப்பட்ட முடக்க நிலையின் போது, இலங்கை இராணுவ மாணவர்களை நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதற்காக இந்திய பாதுகாப்பு ஸ்தாபனம் எவ்வாறு ஆதரவளித்தது என்பதையும் நினைவு கூர்ந்த அவர், இந்த வசதிகளை வழங்கியமைக்காக அமைச்சருக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

பாதுகாப்புத் துறையில் இந்தியப் பயிற்சி வாய்ப்புக்களை அதிக அளவில் பெற்ற ஒரே நாடாக இலங்கை விளங்குகின்றது. இலங்கை இராணுவ மாணவர்களுக்கு இந்தியாவில் மேலதிக பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு உயர்ஸ்தானிகர் பரிந்துரைத்தார்.

கோவிட்-19 தொற்றுநோயின் போது, மருத்துவப் பொருட்களுடன் கூடிய இராணுவ விமானங்களை அனுப்பி வைத்தமை, இந்தியக் கடற்படைக் கப்பல் 'சக்தி' யின் மூலம் இலங்கைக்குத் தேவையான மருத்துவத்தர ஒட்சிசனை அனுப்பி வைத்தமை, இலங்கைக் கடற்படைக் கப்பல் 'ஷக்தி' யின் மூலம் அதனை எடுத்துச் செல்வதற்கு வசதிகளை வழங்கியமை மற்றும் இந்திய விமானப்படையின் போக்குவரத்து விமானம் மூலம் அவசரமாகத் தேவைப்படும் நனோ நைதரசன் உரங்களை விமானத்தில் எடுத்துச் சென்றமை போன்ற இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்காக பாதுகாப்பு அமைச்சர் சிங்கிடம் உயர்ஸ்தானிகர் மொரகொட தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள இலங்கை இராஜதந்திரத் தூதரகங்களுக்கான ஒருங்கிணைந்த மூலோபாயம் 2021/2023 'என்ற தனது கொள்கை வரைபடத்தின் பிரதியை உயர்ஸ்தானிகர் மொரகொட அமைச்சர் சிங்கிடம் கையளித்தார்.

## கிண்ணியா மிதப்பு பால விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



கிண்ணியா, குறிஞ்சாக்கேணி மிதப்பு பாலம் கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ளது.

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டிருந்த பெண்ணொருவர், கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதனையடுத்து, குறிஞ்சாக்கேணியில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற மிதப்பு பாலம் கவிழ்ந்த விபத்தில் இதுவரையில் 4 சிறுவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒமிக்ரான் பரவலை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கையும் தயார்

## -இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா-

கொவிட்-19 இன் ஆபத்தான ஒமிக்ரான் மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டியில நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

புதிய மாறுபாடு குறித்து நிபுணர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பதாகவும், முழுமையான பகுப்பாய்வுக்குப் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவிப்பார்கள்.

எமது கொரோனா செயலணி பல்வேறு கொரோனா திரிபுகளின் போது வெற்றிகரமாக செயற்பட்டு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வெற்றிகண்டுள்ளோம்.

மேலும் எமது சுகாதாரத் துறையினர் கொரோனாவுக்கு எதிராக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு மக்களை பாதுகாப்பதில் முன்னின்று உழைத்தவர்கள்.

ஆகையால் தற்போதைய கொவிட்-19 இன் ஆபத்தான ஒமிக்ரான் மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பார்கள்.

முடக்கல் நிலைக்கு செல்லாதிருக்க மக்கள் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# அநுராதபுரத்தில் காஸ் அடுப்பு வெடித்ததில் தீ பரவி உணவகம் பலத்த சேதம்



அனுராதபுரம்-குருந்தன்குளம் பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்து தீ பரவியதால்; கடைக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சமையல் எரிவாயு அடுப்பு பலத்த சத்தத்துடன் வெடித்ததையடுத்து தீ பரவியிருந்த நிலையில், மக்களுடன் இணைந்து தீயை அணைக்கும் படையினர் பணியில் ஈடுபட்டு தீயை அணைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

தனது கடையில் சமையலுக்கு பயன்படுத்தப்பட்ட எரிவாயு அடுப்பு வெடித்ததால் இந்த வெடிப்பு ஏற்பட்டதாக அந்த உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

# பிங்கிரிய விபத்தில் மனநிலை பாதிக்கப்படவர் உயிழப்பு

சிலாபம் - குருநாகல் வீதியின் பிங்கிரிய பகுதியில் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த நபரொருவர் மீது லொறி மோதியதில் இந்நபர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் பிங்கிரிய பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய மனநிலை பாதிக்கப்பட்டவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்தில் காயமடைந்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக பிங்கிரிய வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து சம்பவம் தொடர்பில் பிங்கிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஐ.நா. விசேட அறிக்கையாளரிடம் மலையக அரசியல் அரங்கம் மனு

மலையகப் பெருந்தோட்ட மக்கள் கடந்த இருநூறு ஆண்டு காலமாக காணி, வீடு, கல்வி, சுகாதாரம் முதலான அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதில் இருந்து திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப்படுவதாகவும் ஏனைய சமூகங்களில் இருந்து பாரபட்சமான முறையில் நடத்தப்படுவதாகவும் எடுத்துக் கூறி, இது அரை அடிமைத்தனத்துக்கு ஒப்பானது என்றும் இந்த விடயத்தை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்கு கொண்டு வருதல் வேண்டும் எனவும் தமது எழுத்து மூல கோரிக்கையை அடிமைத்தனத்துக்கு எதிரான ஐ.நா விஷேட அறிக்கையாளரான டொமொயா ஒபோகாட்டா விடம் கையளித்துள்ளதாக மலையக அரசியல் அரங்கம் அறிவித்து உள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக இலங்கையில் தங்கி இருந்த அடிமைத்தனத்துக்கு எதிரான ஐ.நா.விஷேட அறிக்கையாளர் டொமொயா ஒபகாட்டோ தமது பயணத்தை முடித்துக்கொண்டு திரும்புகையிலேயே ஐ.நா கொழும்பு வளாகத்தில் ஊடகச்சந்திப்பை நடத்தி இருந்தார். இதன் போதே மலையக அரசியல் அரங்கத்தின் செயலாளர் நா.கிருஷ்ணகுமார் தமது அமைப்பின் சார்பான கோரிக்கை மனுவை கையளித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது.

ஏதேனும் வடிவத்தில் அடிமைகள் போன்று நடத்தப்படும் மக்கள் சமுதாயத்தினர் இலங்கையில் இருப்பார்களாயின் அவர்கள் குறித்த விபரங்களை பெற்று ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கையிடும் பணியினை மேற்கொள்ளவே விஷேட அறிக்கையாளர் டொமொயா ஒபகாட்டோ இலங்கை வருகை தந்திருந்தார். இலங்கையில் மலையகப் பெருந்தோட்டத்துறை யில் தொழிலாளர்களாக கடந்த இருநூற்றாண்டு காலமாக நாட்கூலி முறையிலே வைக்கப்பட்டுள்ள சமுதாயத்தினர் காணி உரிமை மறுக்கப்பட்டவர்களாக உரிய வீட்டு வசதி வாய்ப்புகள், சுத்தமான குடிநீர் சுகாதார வசதிகள் மறுக்கப்படவர்களாக கல்வியிலும் பாரபட்சம் காட்டப்பட்டவர்களாக வைக்கப்பட்டுள்ளனர் என்பதனையும், நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு பெருமளவில் பங்களிப்பு செய்த மோதும் கூட இன்னும் இலங்கையில் அதிக வறுமை மட்டத்தில் வாழ்பவர்களாகவும் அவர்களே உள்ளனர் போன்ற விடயங்களையும் சுட்டிக்காட்டி, இதனால் குடும்ப வறுமை, சிறுவர் தொழில், பெண்கள் உரிமை பாதிப்பு, இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு இல்லாமை போன்ற மாறுபட்ட பிரச்சினைகள் தோன்றி சிறுவர் - பெண்கள் துஷ்பிரயோகம் மரணம் முதலான இன்னல்களுக்கு தோட்டத் தொழிலாளர் சமூகம் தள்ளப்படுவதாகவும் எமது எழுத்து மூல ஆவணத்தில் பதிவு செய்து விஷேட அறிக்கையாளரிடம் கையளித்தோம்.

எமது மனுவில் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் அமைப்பின் செயலாளரான நானும் கையொப்பமிட்டுள்ளோம் என்றார்.

# மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் ரயிலில் மோதிய மாட்டை இறைச்சியாக்கி விற்க முயன்ற நபர் கைது

மன்னார்-மதவாச்சி பிரதான ரயில் பாதையில் ரயிலில் மோதி உயிரிழந்ததாக கூறப்படும் மாடு ஒன்றை வெட்டி இறைச்சிக்காக விற்பனை செய்ய முயன்ற நபர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி மன்னார்-தள்ளாடி பகுதியில் நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு ரயிலுடன் மோதிய மாடு ஒன்றை அப்பகுதியை சேர்ந்த ஒருவர் மீட்டு இறைச்சிக்காக குறித்த மாட்டை வெட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிலங்குளம் பகுதியில் விற்பனை செய்ய முயன்றுள்ளார்.

இதன் போது உயிலங்குளம் பகுதிக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.றூபன் ரொனி சில்வாவிற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் உயிலங்குளம் பகுதிக்குச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் இறைச்சியை மீட்டுள்ளதோடு,சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் நீதிவான் வாசஸ்தலத்தில் குறித்த சந்தேக நபர் ஆஜர்படுத்தப்பட்டதோடு,குறித்த மாட்டு இறைச்சியும் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் குறித்த மாட்டு இறைச்சியை அழிக்க உத்தரவிட்டதோடு, சந்தேக நபரை பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

# வடக்கு தீவுகளில் மின் நிலையங்களை அமைக்க இந்தியா முன்வர வேண்டும்

## -மனோ கணேசன் எம்.பி.-



வடக்கிலுள்ள தீவுகளில் மறு விளைவு இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இந்தியா உடனடியாக முன் வர வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

அப்பதிவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

வட பகுதி தீவுகளில் மறு விளைவு இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இருந்த சீன திட்டம், இந்தியாவின் பாதுகாப்பு ஆட்சேபனை காரணமாக இடை நிறுத்தப்பட்டு விட்டது.இதனை இலங்கைக்கான சீன தூதரகம் அறிவித்துள்ளது.

அதற்கு பதிலாக அதே மின் உற்பத்தி கட்டமைப்பை மாலைதீவின் 12 ஆளில்லா தீவுகளில் முன்னெடுக்க அந்நாட்டு அரசுடன் சீனா உடன்பாடும் கண்டுள்ளது.

இவ்வாறான நிலையில் நம்ம வடக்கு தீவுகளில் மறு விளைவு இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இந்தியா உடனடியாக முன் வர வேண்டும்.

ஏனெனில் இந்த இந்தியா-இலங்கை -சீனா கயிறு இழுப்புகளுக்கு மத்தியில் நம் நாட்டுக்கு, சுத்தமான மின்சாரம் தேவை என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தாயின் உடல் பாகங்கள் தானம் பிள்ளைகள், உறவினர்களின் கருணை

திருகோணமலை பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த தாய் ஒருவரின் உடல் பாகங்களை தானம் செய்ய பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் முன்வந்துள்ளனர்.

நிலாவெளி- ஆறாம் கட்டை இரண்டாவது ஒழுங்கையில் வசித்து வந்த டி.சசிரேகா (41-வயது) தனியார் கம்பெனியொன்றில் சுத்திகரிப்பு தொழிலாளியாக கடமையாற்றி வந்துள்ள நிலையில் அதிக இரத்த அழுத்தத்தினால் நரம்பு வெடிப்பு ஏற்பட்டு அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்ணிற்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில் அவரை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக குடும்பத்தினருக்கு வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் உடலில் அனைத்து பாகங்களும் ஒழுங்காக செயற்பட்டு வருவதாகவும் தலையிலுள்ள நரம்பில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் குறித்த பெண்ணின் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் பெண்ணின் உடற் பாகங்களான சிறுநீரகம் மற்றும் இதயம் போன்றவற்றை தானம் செய்வதற்கு முன்வந்துள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலை நிர்வாகத்திடம் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதன்போது பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் அனுமதியுடன் இரண்டு சிறுநீரகங்களுடன் இருதயம் ஆகியவை பெறப்பட்டுள்ளதாகவும் விசேட வைத்திய குழுவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# பஸ்ஸுக்கு தீ வைத்தவர் 1-1/2 வருடத்தின் பின் கைது



தெரணியகல- மாலிபொட பொத்தெனிகந்த பிரதேசத்தில் தனியார் பாடசாலை ஒன்றுக்குரிய பஸ் தீவைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் 43 வயதான சந்தேகநபர், மாலிபொட-மஹயாய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரணியகலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்தாண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி இரவு, குறித்த பஸ் உரிமையாளரின் வீட்டுக்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சமயம் தீபரவல் ஏற்பட்டு, பஸ் முழுமையாக எரிந்து சாம்பலாகியது.இந்த நிலையில், தெரணியகலை பொலிஸார் தொடர்ச்சியாக முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய, கடந்த வெள்ளிக்கிழமை சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.அவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை அவிசாவளை பதில் நீதிவான் சம்பா முதலிகே முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து சந்தேகநபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# இந்தியாவுக்கு கடல் வழியாக சென்று வருபவர்களினால் மன்னாரில் எச்.ஐ.வி தொற்று அதிகரிக்கும் சாத்தியம்

## -விசேட வைத்திய அதிகாரி தக்சாயினி மகேந்திரநாதன்-




இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக சென்று வருகின்றவர்கள், மற்றும் போதைப்பொருள் பாவனையினால் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக பாலியல் நோய் மற்றும் எச்.ஐ.வி மருத்துவ விசேட வைத்திய அதிகாரி தக்சாயினி மகேந்திரநாதன் தெரிவித்தார்.

உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக சென்று வருகின்றவர்கள், மற்றும் போதைப்பொருள் பாவனையினாலும் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.இதனை கட்டுப்படுத்த சுகாதார துறையினர் தமது தடுப்பு நடவடிக்கை வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.குறித்த நடவடிக்கைகளுக்கு மக்களுடைய ஆதரவை எதிர் பார்த்துள்ளோம்.மக்கள் இவ்விடயத்தில் விழிப்புடன் இருந்து எமது சுகாதார துறைக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை 11 எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இவர்களில் ஒரு தொற்றாளர் இவ்வருடம் 2021 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றார்.

# சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் நாளை செவ்வாய் மீள ஆரம்பம்




தற்காலிகமாக நிறுத்தப்பட்ட சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை நாளை செவ்வாய்க்கிழமை முதல் மீள ஆரம்பிக்கவுள்ளதாக வலுசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

போதிய மசகு எண்ணெய் விநியோகம் இன்மையால் கடந்த நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.இவ்வாறான நிலையில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கான மசகு எண்ணெய்யை பெற்றுக்கொள்வதற்கு நைஜீரிய எண்ணெய் நிறுவனத்தோடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு கனியவள கூட்டுதாபனம் தீர்மானித்துள்ளது. நைஜீரியாவின் எண்ணெய் நிறுவனமொன்றுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய 9 மாதங்களுக்கான மசகு எண்ணெய் விநியோகிக்கப்பட வேண்டுமென கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் அபேசிங்க தெரிவித்தார்.

இதற்கமைய கடந்த ஜூன் மாதம் முதல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் 20 இலட்சத்து 62 ஆயிரத்து 500 மசகு எண்ணெய் கொள்கலன்கள் கிடைக்கப்பெற வேண்டும். எவ்வாறாயினும் இதுவரையில் எந்தவொரு மசகு எண்ணெய் கொள்கலனும் குறித்த நிறுவனத்திடம் இருந்து வழங்கப்படவில்லை.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கான மசகு எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டமைக்கு இது பிரதான காரணம் என கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் அபேசிங்க தெரிவித்தார்.

# வங்கக்கடலில் உருவான 'ஜாவத்' புயல் ஒடிசா மாநிலம் அருகே நிலைகொண்டுள்ளதாக தகவல்



'ஜாவத்' புயல் நேற்றுமுன்தினம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்த நிலையில், அது தற்போது ஒடிசா அருகே நிலைகொண்டுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது வடக்கு, வடகிழக்கு திசையில் நகர்ந்து மேலும் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக ஒடிசா கடலோரப் பகுதியை நெருங்கும் என்றும் மையம் குறிப்பிட்டுள்ளது. இதனையடுத்து,

அம்மாநிலத்தின் புரி, கட்டாக் உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில், புரி பகுதியில் கடல் சீற்றமாக காணப்படுமென அம்மையம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு வங்கத்தையும் நெருங்கக்கூடும் என்பதால் அம்மாநிலத்திலும் திகா உள்ளிட்ட கடலோரப் பகுதிகளிலும் கடல் சீற்றமாக காணப்படுவதாகஅம்மையம் குறிப்பிட்டுள்ளது.

# பயணிகள் கட்டணம், நடைமேடைச் சீட்டு ஆகியவற்றால் ரயில்வே வருவாய் உயர்வு



இந்தியாவில் பயணிகள் கட்டணம், நடைமேடைச் சீட்டு ஆகியவற்றின் மூலம் ரயில் வேயின் வருவாய் உயர்ந்துள்ளதாக கூறப்படுகின்றது.

2019 - 2020 நிதியாண்டில் ரயில்வே துறை சாதனை அளவாக 50 ஆயிரத்து 669 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியது. 2020 - 2021 நிதியாண்டில்

கொரோனா சூழலில் வருவாய் 15 ஆயிரத்து 248 கோடி ரூபாயாகக் குறைந்தது. நடப்பு நிதியாண்டில் செப்ரெம்பர் வரையிலான 6 மாதக் காலத்தில் மட்டும்

15 ஆயிரத்து 434 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது. பயணிகள் கட்டணம், கொரோனா சூழலில் நடைமேடைச் சீட்டு பத்து ரூபாயில் இருந்து

முப்பது ரூபாய் முதல் 50 ரூபாய் வரை உயர்த்தப்பட்டது ஆகியவற்றால் வருவாய் உயர்ந்துள்ளதாக மூத்த ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மும்பை - அகமதாபாத் புல்லட் ரயில் திட்டம் 2026 - 2027 ஆண்டில் நிறைவேறும் என்றும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தந்தை இல்லாத நூற்றிற்கும் மேற்பட்ட பெண்களுக்கு ஒரே நேரத்தில் திருமணம்



தந்தை இல்லாத 100ற்கும் மேற்பட்ட பெண்களுக்கு, குஜராத்தில் ஒரே நேரத்தில் திருமணம் நடைபெற்றது. சூரத் நகரில் நடைபெற்ற இந்த பிரம்மாண்ட நிகழ்ச்சிக்கு, தொழிலதிபர் மகேஷ் சவானி என்பவர் தனது சொந்த செலவில் ஏற்பாடு செய்திருந்தார். இதில், 3 இஸ்லாமிய பெண்கள், ஒரு கிறிஸ்தவ பெண் உட்பட மொத்தம் 135 தந்தை இல்லாத பெண்களுக்கு, அவர்களது மத வழக்கப்படி திருமணம் செய்து வைக்கப்பட்டது. மணப்பெண்ணுக்கு தேவையான சீர்வரிசையும் வழங்கப்பட்டது.

ஒரு தந்தையை போல் மகேஷ் சவானி தங்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், இது மகிழ்ச்சி அளிப்பதாகவும் திருமணப் பெண்கள் தெரிவித்தனர். இந்த பிரம்மாண்ட திருமண நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த மகேஷ் சவானி, வைர வியாபாரம், ரியல் எஸ்டேட் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை செய்து வருகிறார். மேலும், பள்ளிகள், பல்கலைக்கழகம் மற்றும் மருத்துவமனையையும் நடத்தி வருகிறார். சமூக சேவையில் ஆர்வம் கொண்ட இவர், ஆண்டுதோறும் இவ்வாறு தந்தை இல்லாத பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பதை வழக்கமாக கொண்டுள்ளார்.

# நாகாலாந்தில் தீவிரவாதிகள் என சந்தேகத்தில் பொதுமக்கள் 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.!



இந்தியாவின் – நாகாலாந்தில் பாதுகாப்பு படைகளின் விசேட சோதனை நடவடிக்கை யின்போது தீவிரவாதிகள் என சந்தேகித்து நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் 13 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

மோன் மாவட்டத்தில் தீவிரவாதிகளின் நடமாட்டம் உள்ளதாக வந்த தகவலை அடுத்து பாதுகாப்புப் படையினர் கடும் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, நிலக்கரி சுரங்கத்தில் பணியை முடித்து விட்டு திரும்பிய தொழிலாளர்களை

அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதனை அடுத்து பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 8 பேர் கொல்லப்பட்ட நிலையில், பலர் காயமடைந்தனர். இதை அறிந்து ஆத்திரமுற்ற அப்பகுதி மக்கள்,

பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தியதுடன் அவர்களின் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த மோதலில் உள்ளூர் மக்கள் 5 பேரும், வீரர் ஒருவரும் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், தீவிரவாதிகள் நடமாட்டம் பற்றி கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையிலேயே நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டதாகவும், அங்கு நிகழ்ந்த சம்பவம் வருத்தம் அளிப்பதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

# ஒரே நாளில் ஒரு கோடி தடுப்பூசி டோஸ்களை செலுத்தி 6 ஆவது முறையாக இந்தியா சாதனை



இந்தியா 6 ஆவது தடவையாகவும் ஒரு நாளில் ஒரு கோடி தடுப்பூசி டோஸ்களை செலுத்தி சாதனை புரிந்திருக்கின்றது. இந்தியா முதன்முதலில் கடந்த ஓகஸ்ட் மாதம் ஒரு கோடி தடுப்பூசி டோஸ்களை செலுத்திய சாதனையை எட்டியது.

அதன்பின்னர், செப்ரெம்பர் 27 ஆம் திகதி வரை இதேபோல் 5 முறை இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளான செப்ரெம்பர் 17 ஆம் திகதி ஒரே நாளில் இரண்டரைக் கோடிக்கும் அதிகமான டோஸ் தடுப்பூசிகளை

செலுத்தி இந்தியா உலக சாதனை படைத்தது. இந்த நிலையில், 6ஆவது முறையாக மீண்டும் ஒரே நாளில் ஒரு கோடி டோஸ் சாதனை படைக்கப்பட்டுள்ள நிலையில், உலகின் மிகப்பெரிய தடுப்பூசி இயக்கம் புதிய உச்சத்தை எட்டியிருப்பதாக மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.


சிறு தினக்குரல் விளம்பரம்

மணமகன் தேவை

1991, யாழ். கத்தோலிக்க கோவியர், Software Engineer, பிரான்ஸ், பதிவு # 5738. புதன்கிழமை, 15 December 2021 வரையான பதிவுக்கு 20% விலைக் கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.



சங்வர்தன வாசனாவ — திகதி : 2021-12-04, வெற்றி வாரம் : 465, வர்ணம் : சிவப்பு. சுப்பர் ஜக்பொட் ரூ. 11,326,920/-. ஆங்கில எழுத்து Y, வெற்றி இலக்கங்கள் 61 25 11, விதி எண் 7. வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,595,980/-. எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 11,438,924/-. 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி — சீட்டிழுப்பு வாரம் 107, சீட்டிழுப்பு திகதி 2021.12.04, சனிக்கிழமை. வெற்றி இலக்கங்கள் 25 42 48. வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,431,900/-. இன்று இலட்சாதிபதியானோரின் எண்ணிக்கை 08.

கோடீசன் — ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள் X 28 38 65 67. சீட்டிழுப்பு வாரம் 773, வர்ணம் பச்சை, திகதி 2021. 12. 03, வெள்ளிக்கிழமை. வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,397,220/-. அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,516,890/-.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1582, நிறம் இளஞ்சிவப்பு, சீட்டிழுப்பு திகதி 2021.12.03, தினம் வெள்ளிக்கிழமை. வெற்றி எழுத்தும் இலக்கங்களும் O 05 38 44 52. வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,207,320/-.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1583, நிறம் நீலம், சீட்டிழுப்பு திகதி 2021.12.04, தினம் சனிக்கிழமை. வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Y 26 55 60 69. வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,040,520/-.

ராசி அதிர்ஷ்டம் — திகதி : 2021-12-04, வெற்றி வாரம் : 3295, வர்ணம் : இள நீலம். சுப்பர் ஜக்பொட் ரூ. 2,956,381/-. வெற்றி இலக்கங்கள் 15 18 34 39, கன்னி. வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,922,720/-.

ராசி அதிர்ஷ்டம் — திகதி : 2021-12-03, வெற்றி வாரம் : 3294, வர்ணம் : நீலம். சுப்பர் ஜக்பொட் ரூ. 2,758,865/-. வெற்றி இலக்கங்கள் 03 24 40 55, மிதுனம். வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,990,320/-.

அத கோடிபதி — வெள்ளிக்கிழமை, சீட்டிழுப்பு இல: 1408, வர்ணம்: ஊதா, சீட்டிழுப்பு திகதி: 2021.12.03. வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,445,740/-. வெற்றி இலக்கங்கள் 14 45 61 76, ஆங்கில எழுத்து Z. வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி — சனிக்கிழமை, சீட்டிழுப்பு இல: 1409, வர்ணம்: மஞ்சள், சீட்டிழுப்பு திகதி: 2021.12.04. வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,228,120/-. வெற்றி இலக்கங்கள் 20 39 68 77, ஆங்கில எழுத்து E. வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா — சனிக்கிழமை, சீட்டிழுப்பு திகதி: 2021.12.04, சீட்டிழுப்பு இல: 3744, வர்ணம்: பச்சை. வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,767,780/-. வெற்றி இலக்கங்கள் 04 35 46 67, ஆங்கில எழுத்து M. வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா — வெள்ளிக்கிழமை, சீட்டிழுப்பு திகதி: 2021.12.03, சீட்டிழுப்பு இல: 3743, வர்ணம்: செம்மஞ்சள். வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,938,600/-. வெற்றி இலக்கங்கள் 03 42 57 58, ஆங்கில எழுத்து V. வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# இந்தோனேசியாவில் செமெரு எரிமலை வெடித்துச் சிதறியதில் சிக்கி 13 பேர் பலி

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் உள்ள செமெரு எரிமலை சனிக்கிழமையன்று வெடித்துச் சிதறி சீற்றம் கொண்ட நிலையில் இந்த அனர்த்தத்தில் சிக்கி குறைந்தது 13 பேர் உயிரிழந்தனர். அத்துடன் 57இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததாக அவசரகால அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெடித்துச் சிதறிய எரிமலையில் இருந்து தொடர்ந்து பெருமளவில் புகை மற்றும் சாம்பல் வெளியேறி வருவதால் 5 கிலோ மீற்றர் சுற்றளவுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் மக்கள் நடமாட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சில கிராமங்களில் உள்ள வீடுகளின் கூரைகள் வரை சாம்பலால் மூடப்பட்டுள்ளன. அடர்த்தியான புகை சூரிய வெளிச்சத்தை மறைத்துள்ளதால் பல கிராமங்கள் இருள் சூழ்ந்து காட்சியளிக்கின்றன.



இதேவேளை எரிமலை வெடிப்பில் சிக்கி காயமடைந்த 57 பேர் பல்வேறு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் பலர் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என இந்தோனேசியாவின் பேரிடர் முகாமைத்துவ மையத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

எரிமலை வெடிப்பை அடுத்து ஜாவா தீவின் லுமாஜாங் மாவட்டத்தில் உள்ள குறைந்தது 11 கிராமங்கள் எரிமலை சாம்பலால் மூடப்பட்டுள்ளன. இங்குள்ள வீடுகளையும் சாம்பல் மூடியுள்ளது. இந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

லுமாஜாங் மாவட்டத்தில் மட்டும் 902 பேர் இதுவரை இடம்பெயர்ந்து வெளியேறியுள்ளதாக இந்தோனேசியாவின் பேரிடர் முகாமைத்துவ மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


இதேவேளை எரிமலை வெடிப்பின் பின்னர் எழுந்த பெரும் புகை சாம்பல் போன்ற காரணிகளாலும் மழையால் எரிமலைக் கழிவுகள் பெரும் சேறாக மாறியுள்ளதாலும் மீட்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியாவில் மிகவும் சுறுசுறுப்பான எரிமலைகளில் ஒன்றான மொராபி எரிமலை 2,930 மீற்றர் உயரம் கொண்டது. இந்த எரிமலை அடிக்கடி வெடித்துக் கிளம்புவது வாடிக்கையாக உள்ளது.

இந்தோனேசியாவில் உள்ள 17,000 தீவுகளில் 400 எரிமலைகள் உள்ளன. அவற்றில் 129 எரிமலைகள் இடையிடையே சீற்றம் கொள்கின்றன. இதில் 65 எரிமலைகள் ஆபத்தானவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தோனேசியா நிலநடுக்கம் சுனாமி, நிலச்சரிவு, வெள்ளம், எரிமலை என பல்வேறு இயற்கை சீற்றங்களாலும் பேரிடர்களாலும் அடிக்கடி பாதிக்கப்பட்டு வருகிறமையும் குறிப்பிடத்தக்கது.

## பெல்ஜியம் உயிரியல் பூங்காவில் இரு நீர்யானைகளுக்கு கொரோனா



பெல்ஜியம் நாட்டில் உள்ள ஆண்ட்வெர்ப் உயிரியல் பூங்காவில் இரு நீர்யானைகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவை இரண்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

14 வயதான இமானி மற்றும் 41 வயதான ஹெர்மியென் என்ற இந்த நீர்யானைகளுக்கு எப்படி கொரோனா தொற்று ஏற்பட்டது? என்பது தெளிவாகத் தெரியவில்லை.

எனக்குத் தெரிந்தவரை உலகில் நீர் யானைகள் கொரோனா தொற்றுக்குள்ளாகி உறுதி செய்யப்பட்ட முதல் சம்பவமாக இது உள்ளது என மிருகக்காட்சிசாலையின் கால்நடை மருத்துவர் பிரான்சிஸ் வெர்காமென் கூறினார்.

தொற்று உறுதி செய்யப்பட்ட நீர்யானைகளுக்கு லேசான அறிகுறிகளே உள்ளன. இரண்டும் நல்ல உடல்நிலையுடன் உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நீர்யானைகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து பூங்காவில் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. அவற்றின் இருப்பிடம் முழுவதுமாக அடைக்கப்பட்டுள்ளது. நீர்யானைகளை கவனிப்போருக்குக் கொரோனா தொற்று இல்லை என்றாலும் முகக்கவசம் அணிதல் தங்கள் பொருட்களை முழுவதுமாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்தல் உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

தொற்றுக்கான காரணங்களை ஆண்ட்வெர்ப் உயிரியல் பூங்கா நிர்வாகம் ஆராய்ந்து வருகிறது. உயிரியல் பூங்கா பணியாளர்கள் யாரும் சமீபத்தில் கோவிட் தொற்று அறிகுறிகளைக் காட்டவில்லை என்று மிருகக்காட்சிசாலை நிர்வாகம் கூறியுள்ளது.


## தடுப்பூசி செலுத்தினால் எய்ட்ஸ் வரும்: பிரேசில் ஜனாதிபதியின் கருத்து தொடர்பில் விசாரணை



கோவிட்-19 தடுப்பூசியை செலுத்தினால் எயிட்ஸ் வரும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாக பிரேசில் ஜனாதிபதி கூறிய கருத்து தொடர்பாக அந்நாட்டு உச்ச நீதிமன்றம் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது.

சமூக வலைதளத்தில் இந்த கருத்தை பதிவிட்டமையினால், போலி செய்தி கொள்கைகளின் கீழ் பேஸ்புக் மற்றும் யூடியூப்பில் இருந்து அவர் தற்காலிகமாக தடை செய்யப்பட்டார். தொற்றுநோயைக் கையாண்டது குறித்து பிரேசிலின் ஜனாதிபதி ஜெயர் போல்சனாரோ ஏற்கனவே தனி விசாரணையை எதிர்கொண்டு வருகின்றார். தடுப்பூசிகளின் செயற்திறன் குறித்து அடிக்கடி சந்தேகம் எழுப்பிவரும் அவர் எய்ட்ஸ் நோய் வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கக்கூடும் என கூறியுள்ளார். இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## பிரெஞ்சு மீன்பிடி படகுகளுக்கு அதிக உரிமங்களை வழங்கியுள்ள ஜெர்சி



தற்காலிக உரிமங்களை கொண்டிருந்த மேலும் ஒன்பது பிரான்ஸ் மீன்பிடி கப்பல்களுக்கு ஜெர்சி அரசாங்கம் நிரந்தர உரிமங்களை வழங்கியுள்ளது.

பல பிரெஞ்சு படகுகளுக்கு மீன்பிடி உரிமத்தை மறுக்கும் இங்கிலாந்து மற்றும் ஜெர்சியின் முடிவால் முன்பு விரக்தியடைந்த பிரான்ஸ் ஜெர்சிக்கு ஒரு இறுதி எச்சரிக்கையை விடுத்திருந்தது.

இந்நிலையில் 125 பிரெஞ்சு படகுகளுக்கு தற்போது ஜெர்சி மற்றும் அதைச் சுற்றி மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


## கென்யாவில் ஆற்றை கடக்க முயன்ற பேருந்து கவிழ்ந்து விபத்து 23 பேர் நீரில்மூழ்கி மரணம்




கென்யா நாட்டில் திருமண நிகழ்வுக்கு சென்ற பேருந்து ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 23 பேர் நீரில்மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கென்யாவின் தலைநகரான நைரோபிக்கு கிழக்கே உள்ள என்ஜியு ஆற்றில் உள்ள பாலத்தின் மீது வேகமாக ஓடும் தண்ணீருக்கு மத்தியில் பேருந்து கடக்க முயன்ற போது இந்த விபத்து நேர்ந்துள்ளது. இறந்தவர்களில் 4 பேர் குழந்தைகள் என்றும் விபத்தில் சிக்கியவர்களில் குறைந்தது 12 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. 23 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் பலர் பேருந்தில் சிக்கியிருப்பதாகவும், மீட்பு பணிகள் இன்று திங்கட்கிழமையும் தொடரும் என்றும் கூறியுள்ளனர். கென்யாவின் பல பகுதிகளில் சமீபத்தில் வழக்கத்திற்கு மாறான கனமழை பெய்து வருகிறமையினால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மிச்சிகன் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு சந்தேகத்திற்குரியவரின் பெற்றோர் கைது





அமெரிக்கா - மெக்சிக்கோ பாடசாலையில் துப்பாக்கி சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் மாணவனின் பெற்றோர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜேம்ஸ் மற்றும் ஜெனிஃபர் க்ரம்ப்ளே ஆகிய இருவரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதை அடுத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

15 வயதான குறித்த சிறுவன் தந்தையின் துப்பாக்கியைப் பயன்படுத்தி சக மாணவர்களை நோக்கி சுட்டதில் நான்கு பேர் கொல்லப்பட்டதோடு ஏழு பேர் காயமடைந்தனர். இந்நிலையில் தன்னிச்சையான ஆணவக் கொலை குற்றச்சாட்டுகளை மாணவனின் பெற்றோர் மறுத்துள்ளனர்.

# கொங்கோவின் சுரங்க முதலாளி பணி நீக்கம்


கொங்கோ குடியரசின் ஜனாதிபதி பெலிக்ஸ் சிசெகெடி, அரசுக்குச் சொந்தமான சுரங்க நிறுவனத்தின் தலைவரை பதவி நீக்கம் செய்துள்ளார்.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக தலைவராக இருந்த முன்னாள் ஜனாதிபதி ஜோசப் கபிலாவின் நெருங்கிய கூட்டாளியான ஆல்பர்ட் யூமா, பல மில்லியன் டொலர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

சுரங்கத் துறையைச் சுத்தப்படுத்துவது ஒரு முக்கிய பணி என்பதனால் சர்வதேச அழுத்தத்தின் மத்தியில் இந்த முடிவை எடுத்துள்ளதாக ஜனாதிபதி பெலிக்ஸ் சிசெகெடி கூறியுள்ளார்.

உலகின் மிகப்பெரிய கோபால்ட் சப்ளையர் என்ற வகையில், மின்சார வாகனங்களுக்கு உலகளாவில் இருந்து பெருமளவில் இலாபத்தை கொங்கோ ஈட்டுகிறது. இதேவேளை சுரங்கத் துறை ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களால் சிக்கியுள்ளது என பல மனித உரிமை குழுக்கள் நீண்ட காலமாக குற்றச்சாட்டினை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியாவில் 21 ஒமிக்ரான் நோயாளிகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல்




நைஜீரியா நாட்டுக்கு பயணம் செய்துவந்தவர்களில் 21 ஒமிக்ரான் தொற்றாளர்கள் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இந்த எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் பிரித்தானிய சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

ஒமிக்ரானுடன் தொடர்புடைய வழக்குகளின் அடிப்படையில் தென்னாபிரிக்காவிற்கு அடுத்தபடியாக நைஜீரியா இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் சஜித் ஜாவிட் தெரிவித்தார்.

எனவே தடுப்பூசிகளை கொரோனா வைரஸுக்கு எதிரான நாட்டின் முதல் பாதுகாப்பு என்பதனால் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் 26 ஒமிக்ரோன் நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 25 இங்கிலாந்திலும் ஒன்று ஸ்கொட்லாந்திலும் பதிவாகியுள்ளன.

அந்த எண்ணிக்கை இங்கிலாந்தின் மொத்த ஒமிக்ரோன் நோயாளிகளின் எண்ணிக்கையை 129 ஆக கொண்டுவந்துள்ள அதேநேரம் ஸ்கொட்லாந்தில் இதுவரை 30 நோயாளிகளும் வேல்ஸில் ஒரு நோயாளியும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பிரித்தானிய புதிய பயண கட்டுப்பாடுகளை கொண்டுவந்துள்ள நிலையில் பயணிகளுக்கான புதுப்பிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை கொண்டுவரவுள்ளதாக ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஷ் அரசாங்கங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

# உக்ரைன் பதற்றங்களுக்கு மத்தியில் பைடன் - புடின் அடுத்த வாரம் பேச்சு

உக்ரைன் நாட்டில் அதிகரித்துவரும் பதற்றங்களுக்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் - ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இடையில் இன்று காணொளி மூலமாக பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என கூறப்படுகின்றது.


உக்ரைன் மீதான பாரிய அளவிலான தாக்குதலுக்கு ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்பதற்கான ஆதாரம் அமெரிக்காவிடம் இருப்பதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அண்டனி பிளிங்கன் அண்மையில் கூறியிருந்தார்.

இருப்பினும் அத்தகைய செய்திகளை மறுத்துள்ள ரஷ்யா, உக்ரைனே தனது சொந்த படைகளை குவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையின் போது,

உக்ரைன் எல்லையில் ரஷ்ய இராணுவ நடவடிக்கைகள் குறித்த அமெரிக்காவின் கவலைகளை ஜோ பைடன் சுட்டிக்காட்டுவார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

மேலும் உக்ரைனின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான அமெரிக்காவின் ஆதரவை ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் உறுதிப்படுத்துவார் என்றும் வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

கவச வாகனங்கள், மின்னணு போர் முறைமைகள் மற்றும் 94 ஆயிரம் துருப்புக்களை ரஷ்யா எல்லையில் நிறுத்தியுள்ளதாக உக்ரைன் கூறுகிறது. 2014 ஆம் ஆண்டு உக்ரைனிடம் இருந்து கிரிமியா நகரை இணைத்ததில் இருந்து அதன் எல்லையில் ரஷ்யப் படைகள் அதிக அளவில் குவிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.